ஸ்ரீ:

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்

இது:

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்"ப்பத்திராதிபர்

## திரு. நாராயணையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றுப்

பதிப்பிக்கப்பட்டது.

23553

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்—௪௰.

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1919.

விலை அணா 8.

ஸ்ரீ:

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90

## முகவுரை.

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழியகத்தே, அன்பும், இன்பும், அறனும், மறனும் சான்ற அகத்திணை புறத்திணைதழுவிய துறைவகைகளில் தோன்றுதொட்டவழக்காயுள்ளபனுவல்கள் எத்துணையோ பலவுள்ளன; அவற்றுள், 'பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தவகையுமொன்று.

'பிள்ளைத்தமிழ்' என்பது, பெறலருஞ் சிறப்புவாய்ந்த மக்கட்குழவியைப் பாராட்டிப்பாடும் இனியபாடல்களாலாகிய பிரபந்தம் என்று பொருள்படும். இங்கு, 'தமிழ்' எனனுஞ் சொல் பிரபந்தத்தையுணர்த்து மென்பதை, இந்நூலாசிரியர் தம் ஞானாசிரியர் வணக்கத்துள், 'வேதப்பாட்டிற்றருந் தமிழ்' என்று திவ்யப்பிரபந்தங்களை வழங்குதலாலும், இயலிசைநாடக நூல்களை இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் எனவும், முத்தமிழ் எனவும் வழங்குதலாலுமறிக.

இப்பிரபந்தம், புறப்பொருள் வகையாகிய பாடாண் திணையில் 'குழவிமருங்கினுங்கிழவதாகும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் கொள்ளப்பட்ட *காமப் பகுதியின் பாற்பட்டு மக்கட் குழவிக்குரித்தாக வழங்கப்படுமாயினும், ஒரோவழி, தெய்வத்தோற்றமாகிய மக்கட் குழவியின் பருவத்தை ஆரோபித்தலால், அக்குழவியோடொற்றுமையுடைய தெய்வத்துக்கும் உரியதாக வழங்கப்படும். இச்சூத்திரத்தில், கிளப்பதாகும் என்னாது 'கிழவதாகும்' என்ற குறிப்பால் குழவிப் பரு

---

* இங்குக் கூறிய காமப்பகுதியாவது, பெறலரும்பிள்ளையைப் பெற்றதாய் முதலியோர் பாராட்டுதற்குரிய, 'குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, இட்டுந்தொட்டுங் கௌவியுந்துழந்து நெய்யுடையடிசின்மெய்பெற விதிர்த்தும், விளையாடுதன் முதலிய செயல்களை அனுபவிக்குமவரிடைத் தோன்றும் ஒருதலையின்பம். இதனை, 'மக்கண்மெய்தீண்டலுடற்கின்பம் மற்று அவர் சொற்சேட்டலின்பம் செவிக்கு, என்றற்றொடக்கத் தானுமறிக. இதனாலவர் விளையாட்டுக்காண்டலும் கட்கின்பமென்பது போதரும்.

வங்கழிந்த முதியரை அவரது குழவிப்பருவம்பற்றிப் பாராட்டிப் பாடினும் அப்பாட்டில், அம்முதியரோடொற்றுமையுடைய அக்குழவிக்கு உரிமையுடைமையான் அது வழுவாகாதென்று கொள்ளப்படும்.

இப்பனுவலைப் பன்னிருபாட்டியலுடையார் பிள்ளைப்பாட்டென வழங்கி, இலக்கணம் பல தா மியம்பியும், ஆன்றோர் கூறிய சில இலக்கணங்களை யெடுத்துக்காட்டியும் போந்தனர்; வெண்பாமாலையுடையார் (*'இளமைந்தர் நலம்வேட்ட வளமங்கையர் வகையுரைத்தல்' என்னும்) குழவிக்கட்டோன்றிய காமப்பகுதியின் பாற்படுப்பர்.

'வழக்கொடு சிவணியவகைமையான' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துள், 'சான்றோர் செய்த புலனெறிவழக்கோடே பொருந்தி வந்த பகுதிக்கண்ணேயான பொருள்களுள்' குழவிமருங்கினுங்கிழவதாகிய பிள்ளைப்பாட்டுப் பொருள்களையும் அகப்படுத்துக் கூறியிருத்தலால் இப் பிரபந்தவகை தொல்காப்பியர்காலத்துக்கு முற்பட்ட சான்றோரால் செய்துபோந்த பழையவழக்குடையதென விளங்குகின்றது. இதற்குதாரணமாகப் பெரியாழ்வார்திருமொழியுட் பலவேறு பொருள் வகைகளாலும் பிள்ளைப்பாட்டுப் பாடப்பெற்றிருப்பது காணத்தகும். அதன்கண், தால், சப்பாணி, செங்கீரை, முதலியவற்றுடன், இக்காலப் பிள்ளைத்தமிழி லில்லாத பிறப்பின் உவகை, பாதாதிகேசக்காட்சி, தளர் நடை, அச்சோவச்சோ, புறம்புல்கல் அப்பூச்சிகாட்டல், நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், அம்மமூட்டல், முதலியபலவேறு பொருள் பற்றிய பாராட்டல்கள் உள்ளன.

இங்ஙனம் பல பொருள்களிருப்பவும், ஒருபொருள்பற்றிப் பாராட்டும் பாட்டுத் தனித்தனி பதிகமாகவும், பிரபந்தமுழுதும் சதகமாகவும் ஓரளவுடையதாக முடிக்கவேண்டிக் காப்புமுதற் சிறுதேரிறுதியான பத்துப்பொருள்களை இப்பிரபந்தத்துக்குரியனவாகப் பிற்காலத்தார் தெரிந்தெடுத்து நியமித்துப்போந்தனர் போலும்.

இங்ஙனம் பழமையும் அருமையும் வாய்ந்த பிரபந்தவகையிற் சேர்ந்த பிள்ளைத்தமிழ்களிற் சிறந்தவற்றுள் இத்திருமாலிருஞ் சோலைமலை அழகர்பிள்ளைத் தமிழும் ஒன்றெனெண்ணத் தக்கது.

---

* (இளமைந்தர் நலம் வேட்டவளமங்கையர் வகையுரைத்தலாவது) கண்ணபிரானது இளமைப்பருவ விளையாட்டின்பத்தை விரும்பியசோதைப்பிராட்டியும் இடைப்பெண்களும் பாராட்டியபடியைப்பெரியாழ்வார் அனுகரித்தல்போல்வது.

இவ்வழகர் பிள்ளைத்தமிழ், காப்புமுதற் சிறுதேரிறுதியாகப் பத்துப் பருவப் பாராட்டலையு முடையதாய்ப் பலவேறு சந்தப்பாடல்களாற் சிறந்தது. காவியங்கற்பார்க்கு, இலக்கிய விலக்கண வழக்கு வகை பலவுமெளிதினுணர்த்திச் சொற்பொருளுணர்ச்சியைத் திட்பமுறச் செய்யுந் திறமையுடையது; செய்யுட் செய்வார்க்கு விடயமில்லாவிடத்தும் பொருத்தமுள்ள விசேடணங்களை வருத்தமின்றித் தொடுத்துப் பொருளை விசேடித்துப் பலபடியாகச் செய்யுளை யழகுபெறச்செய்து முடிக்கு மாற்றலையளிக்க வல்லது; ஐந்திணை மயக்கம்,நானிலவருணனை, கற்பனை, அலங்காரமுதலிய பலநயங்களமைந்தது. திருமாலினவதாரமாகவந்த கண்ணபிரானது குழவிப்பருவத்தை ஒற்றுமைபற்றி அழகர் மேல்வைத்து, அக்கண்ணபிரானது இளமைநலம்வேட்ட யசோதைப் பிராட்டியுமிடைப் பெண்களுமாகிய "வளமங்கையர்" படியை அத்திய வசித்து மிகவும் பாராட்டிப் பாடப்பெற்றுள்ளது.

இப்பிரபந்தத்தின் பாயிரச்செய்யுளில் 'வள்ளைத்தமிழ்கூர் வேம்பத்தூர் வருமாண்புலவோர்வகுத்தது' என்று சொல்லப்பட்டிருத்தலால் இதனையியற்றியவர் பிறந்தவூர் வேம்பத்தூர் என வெளியாகிறது. இவ்வூரின்கட் டொன்றுதொட்டே ஆசு, மதுர, சித்ர, விஸ்தார கவிகளும், பிரபந்தங்களு மியற்றிப்போந்த பலபுலவர்க ளிருந்துவந்திருக்கின்றனரென்பதை, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணப்பதிப்பின் முகவுரையில் மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ, வெ. சாமிநாதையரவர்களெழுதியிருப்பதால் அறியலாம். இப்பாயிரச்செய்யுளில், 'புலவோர்வகுத்தது' என்ற பன்மைக்கிணங்க வேம்பத்தூர்ச் சங்கப்புலவர் பலர்கூடி இப்பிரபந்தத்தையியற்றினரென்று சிலர் ஓர் ஐதிகம் சொல்வதுமுண்டு. இது பின்வருமாற்றாற் கொள்ளத்தக்கதன்று.

பதிச்சினர்ப்பரவலின் பன்னிரண்டாம் செய்யுளிலே, 'பேசுபய வேதாந்ததேசிகன் றடோழுவல் பேரழகனூறமையவே' என்று தொழுவலென்னும் ஒருமையால் அழகனூலாகிய இப்பிரபந்தமுழுதும் தமைத தற்கு மங்களங்கூறியிருத்தலானும், மற்றும் சில பாடல்களிலும் மங்களங்கூறியவிடங்களிலெல்லாம் இவர் இப்பிரபந்தத்தை 'என்கவி'என்று தாமேகூறியிருத்தலானும் இப்பிரபந்தம் ஓரேபுலவராற் பாடப்பெற்றிருக்கலாமென்று தோன்றுகின்றது.

இதற்கனுகுணமாகவே சேதுசமஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்காரவர்கள் அரிதின் ஆராய்ச்சிசெய்தெழுதிச் 'செந்தமிழில்' வெளியிட்ட சேதுநாடும்தமிழும்* என்ற வியாசத்தில இந்நூலியற்றியவரது பெயர், சாமிகவிகாளருத்திரர் என்று எழுதியுள்ளார்கள். கவிகாளருத்ரர் என்பது, பிறரால் வெல்லப்படாத ஆற்றல்பற்றி வழங்கும் 'கவிராக்ஷஸன்' என்பதுபோல இவரது கவித்திறமைபற்றிப்பின்பு வந்த சிறப்புப்பெயராயிருக்கவேண்டுமாதலால் அப்பெயர்க்குமுற்பட்டு, 'மாந்தரக்கொங்கேனாதி' என்புழிப்போலப் பண்புத்தொகைநிலைமொழியாய்நின்ற சாமி என்னும்பெயரே இவரது இயற்பெயராயிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

பழிச்சினர்ப்பரவலின் பதினான்காம்பாட்டில் இவர், தாம் அழகர்கோவிற்புரோகித நிர்வாகம்பெற்றிருந்த தோழப்பர் என்னும் ஸ்ரீவைஷ்ணவரால் 'தொண்டர்குழுவாகிய அத்தியாபககோஷ்டியிற் சேர்க்கப்பட்டவரென்று கூறியிருத்தலால, இவர் பஞ்சசமஸ்காரம்பெற்றுத் திவ்யப்பிரபந்தங்களோதிச் சாத்தினவரென்பதும் 'வேதப்பாட்டிற்றருந்தமிழுமிருநாலெழுத்தும்'......'அலங்காரர்படிவும் என்னெஞ்சகத்துள்நாட்டி' என்றமையால் பகவத்விஷயாதிக்ரந்தங்களும், திருமந்த்ரார்த்த வியாக்யானமும், அர்த்தபஞ்சகாதி ரஹஸ்யங்களும் தோழப்பரிடம் அதிகரித்தவரென்பதும், 'நற்றமிழ்ச்சீர்பதிப்போன்' என்றதனால் அரியதமிழிலக்கிய விலக்கணங்களையும் அத்தோழப்பரிடமேகேட்டு நெஞ்சிற் பதியக்கொண்டவரென்பதும் விளங்குகின்றன. இதனால் இவரதுகாலம் இற்றைக்குச்சற்றேறத்தாழ நூற்றைம்பதுவருடங்கட்குமுன்பு திருமாலையாண்டார் சந்ததியாருள் ஒருவர்க்கு மாதுலராய்வந்து அழகர்கோவிற்புரோஹிதநிர்வாஹம் பெற்றிருந்த தோழப்பர்காலமென்றறியத்தக்கது.

இவர், வேதாந்ததேசிகரையும் மணவாளமாமுனிகளையும் வழிபடும் பாசுரங்களால் வடகலைதென்கலையென்னு முபயவேதாந்தங்களுக்கும் முறையே ப்ரவர்த்தகர்களான அவ்விருவரையும் வழிபாடுபுரியும் தென்கலை வைஷ்ணவரென அறியலாம்.

இந்நூலிலுள்ள பலபாடல்களையும் பார்க்கும்போது இவர் வைஷ்ணவத்தில்மிக்க ஊற்றமுள்ளவரென்பதும், சங்கநூல்முதலிய பழைய

* செந்தமிழ் தொகுதி 13 பகுதி 2 பக்கம் 51.

தமிழ்நூற்பயிற்சியிற் றேர்ச்சியுற்ற பெரும்புலவரென்பதும், பலரும் சொல்லாதவண்ணச்சந்தங்களைக் கற்பித்துக்கொண்டு சொல்லின்பமும் பொருளின்பமும் சுவையும் அலங்காரமு மிலங்கக் கௌடவிருத்தியி லும் கவிகளியற்றுமாற்றலுடையவரென்பதும் விளங்கும்.

இவர் வைஷ்ணவத்தில் மிக்க ஊற்றமுடையராயிருப்பினும் காப் புப் பருவப்பாராட்டிற் பரவுதற்குரியரென விதிக்கப்பட்ட சிவபெரு மான், விநாயகர், முருகவேள், வைரவன் முதலியோரையும் நன்கு பரவுதலால் விதிமுறைதவறுதொழுகு மியல்புடையவரென்பதும் விளங்கும்.

இந்நூல் சிலபத்தாண்டுகளுக்கு முன்னரே ஒருவா றச்சிடப்பட் டிருப்பினும் இப்பொழுது அச்சுப்புத்தகம் எங்கும் கிடைக்காமையால் இதனை அச்சிட்டாற் காவியங் கற்பார்பலர்க்கும் மிகப்பயன்படுமென்று கருதி மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்த இரண்டு குறைப்பிரதிகளையும் ஓரச்சுப் புத்தகத்தையும் வைத்துப் பரிசோதித்துச் 'செந்தமிழ்' வாயி லாக வெளியிடலாயிற்று.

இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்த இரண்டொரு பிரதிகளும் பிழைமலிந்திருந்தமையால் அவற்றுள் தெரிந்தவற்றைத் திருத்தித் தெரியாதவற்றை யிருந்தபடியே வைத்துப் பதிப்பிக்கலாயிற்று. ஆத லாற் செந்தமிழ்ப் பயிற்சியிற்றேர்ச்சியடைந்த பெரியோரிதனைக் கண் ணுற்று, சுத்தப்பிரதிகொண்டு, திருத்தவேண்டுமவற்றைத் திருத்தி எனது தவற்றைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இதனை அச்சிடுதற்குத் தமிழ்ச்சங்கக் கலாசாலை யுபாத்தியாயர் நல்லசிவன்பிள்ளை பிரதி எழுதிக்கொடுத்தும், அச்சுச் சேர்க்கையை ஒப்பு நோக்கித் திருத்தியும் உதவிபுரிந்தது பாராட்டற்பாலது.

திரு. நாராயணையங்கார்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩௧ | ௪ | பொன்னூற்ற | பொன்றூற்ற |
| ௪௫ | ௨௧ | பருப்பின் | மருப்பின் |
| ௪௬ | ௨௰ | அறிய | அரிய |
| ௬௦ | ௨௭ | வளவாய் | வள்வாய் |
| ௬௩ | ௧௭ | வெறி | வெரி |
| ௬௪ | ௨௧ | மத்தெரி | மத்தெறி |
| ௬௮ | ௰ | கெக்கர் | செக்கர் |
| ௭௧ | ௬ | வைத்ரு | வைத்து |
| ௭௪ | ௨௭ | சோலை | சோலைமலை. |

உ

ஸ்ரீராமஜெயம்.

23553
(9144)

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்.

## பாயிரம்.

### துதிகவி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வெள்ளைத்தமிழ்கொடுலகினிற்பல்புலவர் விருப்பால்வியம்பேனைப்
பிள்ளைத்தமிழ்பிள்ளைத்தமிழேபெருமானலங்காரன்பொருட்டால்
வள்ளைத்தமிழ்கூர்வேம்பத்தூர்வருமாண்புலவோர்வகுத்ததனைப்
பிள்ளைத்தமிழேயெனுஞ்சிறுமைபெருமைபெரியதமிழெனுமால்

### காப்பு.

நேரிசைவெண்பா.

செய்யா ளுருமார்பன் செங்கமலக் கண்ணினான்
மையா ரழகன் மலர்த்தாளின்—மெய்யாகச்
செப்புபிள் ளைத்தமிழ்க்குச் சிந்துரமுன் வந்துதித்த
துப்பனைய பாதந் துணை.

## அவையடக்கம்.

நீரறு மானதப பெருவாவி பூத்ததொளை
நெடுநாள முளரியோடு
நீறுபடு பொற்சுண்ண மாமது வுண்டு * மகிழ்
நிலையுறுகரி தூவியன்னம

* மதி - பி-ம்.

ஆராரு யுகளவும் புனலறு கருஞ்சேற்றி
னடைவாடு புல்லிதழ்ப்பூ
வாம்பலின் மணந்தது கடுக்குமறை யொருநான்
காற்றுநெடி மாலாயிரம்
பேராரு தோதுநா வீறுபெ ற குருலைகமுனி
பிரமன் பாராசான்முதற்
பெற்றமுனி முதலாம் வரத்தினா முகத்தினிற்
பெரு(1)விழவு கொண்டிருக்கும்
வாராரு தண்ணுந் தெழுந்ததுணை முலைவாணி
மதிதவழ வமுதுாயும்
மாலிருஞ் சோலைமலை மாலலங் காரனை
வழுத்துமென் னுவாழ்ந்ததே. (க)

ஆகத் திளங்தென்ற லுறவாச் செந்தழ
லரும்பிலைச் சூதத்தின்வாழ்
அஞ்சிறைய யாழிசை மிடற்று(2)குயி லோசையென்
னமிர்தமிசை யுண்டசெவிகள்
காகத்தின் வெம்புலாற் பகுவாய் திறந்தலறு
கடியகுர லையதிய
கடுவுண் மிசைந்தது நிகர்க்குமருண் மாலையிற்
கதிரொளி பரப்பு(3)மங்கண்
மாகத்து மீன்கண நறுந்துணை ரொளிப்பவிசை
வண்டுமுழ படப்பைமுதலின்
வாவியலை கரை(4)தாவி மீனெளிக் கும்புதுவை
வல்லிதமிழ் கேட்டுாக
போகத்து வெண்டிரைப் பாற்கடலின் விழிதுஞ்சு
பூந்துழாய்க் கொண்டல்சோலைப்
பொருப்புறையு மாயவன் மாலலங் காரனென்
புன்கவிச் சொற்கொண்டதே. (உ)

---

(1) விழைவு - பி-ம்.

(2) குயில்கூவுமின்னமிர்தமொழி. பி-ம்.

(3) பரப்பியங்கண். பி-ம்.

(4) தாவ. பி-ம்.

வழியும் பசுந்தேன் பெருக்காறுடுத்தோட
மலர்விண்ட முள்ளரைத்தாள்
மரகதத் தண்பா சடைக்கமல வீட்டுறையு
மறைய*வன் சென்னிமுதல்பா
இழியுங் குலத்தினவர் கழிமுடைத் தலைகடை
யிரந்துமண் கொள்ளமறைநான்
கிருக்குந் துணைத்தாள் பதித்ததிகைக்குமட
விளையநில வேறுகண்டற்
கழியும் புனற்கழியும் வளையுழுஞ் சோலைமலை
காவலன் றூயவநெடுமால்
கண்ணகன் கோநகர்ப் புதுவைகுடி வாழிளங்
கன்னியுந் தாய்முலைக்கண்
பொழியும் பசும்பாலுருமழலை மாறன்†முதல்
புலவர்பதின் மரும்வழுத்திப்
புனையுந் தமிழ்ப்பாடல் கொண்டதோ வடியென்மொழி
புன்கவித் தொடைகொண்டதே. (௩)

விரவுந் திரைப்புனற் கங்கையங் கடவுணதி
வெள்ளம் பரந்திருப்ப
வினைபுரி குறுந்தொழுவர் தருமிழி கலத்துநீர்
விதுரனின் றுள்சொரிந்தெட்
டரவுங் குலக்கிரியு மணையும்வண் கடல்வேலி
யவனிதிரு வயிறிருப்ப
அவன்மனைப் புன்கலைச் சிற்றடிசி லன்றுணக்
கவனளித் தருநிகர்க்கும்
குரவும் பசுந்துளவு மணநாறு கொந்தளக்
கொடியிடைப் புதுவைவாழும்
கோதையுஞ் சங்கணி துறைக்குருகை மாநகர்க்
குழவிமுத லவர்பதின்மரும்
பரவும் பழம்பாடன் மறைமொழிச் செந்தமிழ்ப்
பாமாலை கொண்டதோவிற்
பழுவடியென் வழுவுடைச் சொன்மாலை சூட்டுமது
பைந்துழாய் மலையுகனே. (௪)

அவையடக்கமுற்றும்.

* மறையயான். பி-ம். † முதல்புலவா - வினைத்தொகை.

# பழிச்சினர்ப்பரவல்.

## முதலாழ்வார் மூவர்.

ஏதங் களைந்தடிய ருயிரொடு மணைப்புற்ற
இருவினை கடைபடவோரேழ்
இசைமுறை பழுத்தவந் தாதிகொடு நெடியமா
லிருசரணை மேதகுபொய்கை
பூதந் தவங்கொள்பே யாழ்வா ரிவரைப் போதிலும்
புலையற வழுத்திப்
பூந்தா மரைத்தாள் வணங்குவென் றெய்வப்
புரந்தர னுலோகபாரி
சாதங் கொணர்ந்தெழிற் பிள்ளைக்கு விளையாடு
தளையவிழ் படப்பையாக்கத்
தாழ்சிறைப் புட்க ருத் தேர்மணி வாய்வைத்த
சங்கவெண் பிடருகக்கும்
நாதங் கொழித்தமரர் கூட்டங்கள் சிதறவவர்
நாட்டங்கள் கூட்டுவித்த
நாரணனை மாலலங் காரனை வழுத்துமென்
னுத்தருஞ சொற்றழையவே. (க)

## பெரியாழ்வார்.

மறுத்தலை துளைத்தமதி மரமுகத் தேனுடன்
வண்டுலவு மதுமாலையும
மாயவன் றிருமார்பு பொற்பக் கொடுத்தவனா
மதுரையிற் பாங்குகிழிதான்
அறுத்தலைச செய்திப வெறுத்தத் துலாப்புரிந்
தாரணைத் தமிழ்படுத்தி
அருமை யிருபதுமும் வாழிபா டும்புதுவை
யந்தணன் றடுதிப்பென்
கறுத்தல நெடும்புணரி யேழ்விடம் பேறியிரு
ளையாயிற் றொ பு சின்ற

கன்மாரி காப்பப் பசுந்தா மரைச்சிறிய
கைக்கொண்ட வரையேழுநாள்
பொறுத்தலைச் செய்திடையர் சுற்றமுங் கன்றும்
புனிற்றாவு நின்றளித்த
பொங்கர்த் தடஞ்சோலை மலையலங் காரனைப்
புகழுமென் கவிதழைப்பவே. (௨)

## நம்மாழ்வார்.

மறைவாக் குரைத்தபொரு ளுள்ளவை யடங்கலும்
வைத்துநா மகிழுறத்தில்
வழுவறத் தெள்ளியவை கோதற வடித்திரதம்
வாய்ப்பவள நாறுதமிழின்
துறைவாக் கெழுங்கலன் பெய்தன்பு நீரிற்
றுழாய்மணப் பதநோக்கிமால்
தொண்டர்க ளருந்தவிய லமுதினை வடித்தமுனி
துணையடி துதிப்பெண்மதுவோர்
முறைவாக்கி வைத்தவைங் கவையுநிறைந் திலவென்று
முதுகுடுமி யிடறியொழுகும்
முழுமதியி லமுதமுங் குறவர்மட மகளிரொரு
முறையாக்கி வழியவார்த்து
நிறைவாக்கி விளையாடு மலையலங் காரர்பத
நித்தலும் வழுத்தியேத்த
நிறைவாக்கு நாளும் பெருக்கா றெடுத்தோடி
நிலைபெற்று வாழ்வதற்கே. (௩)

## குலசேகராழ்வார்.

கெடப்பா யொளிச்செக்கர் மணியார நறவுபாய்
கிளைதுழாய்க் கொண்டலடியார்
கேண்மைகொள் பவருகு மணுகாத வுறைசெவிக்
கேற்பதன்றென்று பருவாய்க்
குடப்பால் விடப்பெரும் பாந்தள்வாய் கையிட்ட
கோவேந்த னரசரேறு
கோப்பெருஞ் சேரமா னடியிணை வழுத்துமென்
குழுமிவா னலவுதிகைப்ப

மடப்பாவை மார்பொய்தல் வண்டலாட் டயரவுகை
மணியூச லாடமேலை
மங்குல்வாய் நெஞ்சம் பிளக்கவுயர் சிமயத்து
மதிவந்து போனவழியே
நடப்பாக வந்துசதி ரிளமாதர் தம்மோடு
நாளுநம்வினை யாடுமலைவாழ்
நாரணனை மாலலங் காரனை வழுத்துமென்
னன்கவிதை வாழ்கவென்றே. (௪)

## திருமங்கையாழ்வார்.

பொருமட னெடுஞ்சுடர்ப் போராழி மால்கரப்
பொன்னாழி கொளவந்தமால்
புட்பிடர் வரக்கண்டு மெய்ஞ்ஞான வெள்ளம்
புறம்பொங்க வுட்களித்துத்
திருமட னெடுந்தாண் டகங்குறுந் தாண்டகச்
செய்யுண்முதல் பலவுரைக்கும்
திருமங்கை முனிகலிய னற்கவிக் கொண்டல்பூஞ்
சேவடி துதிப்பென்றுநீர்
இருமடங் கூறுங் கடாங்கவுட் டூங்கவிழி
யிருகடையும் வடவைதூங்க
இருசெவித் தலைகடைக் காறூங்க மாமண்விடு
மிகல்கரி மருப்புவாங்கி
வருமடங் கற்குருளை மாலிருஞ் சோலைமலை
மாலலங் காரர்பச்சை
வண்டுழாய் மணநாறு மிருதோளு மிருதாளும்
வாழ்த்துமென் கவிதழையவே. (௫)

## திருமழிசையாழ்வார்.

சூட்டுநா கப்பணைப் பள்ளிப் பெரும்பாய்
சுருட்டித் தமிழ்க்கச்சியிற்
றுளவக் கருங்கட னடப்பக் குடந்தையிற்
றுயிலுமுகி றலையணைப்பாய்

பாட்டுநா வுரைசெயுந் திருமழிசை வேந்தன்
பரந்துலாஞ் சிந்தைபொறியின்
பாலணுகு குறுவகை நிறுத்துமுனி தாமரைப்
பாதந் துதிப்பென்மலர்ப்பூ
வீட்டுநான் முகமுனியு நாட்டமா யிரமுடைய
வேந்தனும் விபுதர்குழுவும்
வெட்சியந் தெரியல்புனை வேளும்வா ரணமுகனும்
வெள்ளிவெண் கோடுகூடாக்
கோட்டுநா ளிளமதிக் கண்ணியங் கடவுளுங்
கூண்டுவலம் வந்திறைஞ்சும்
குலமலைத் தலையுறையு மாலலங் காரனைக்
கூறுமென் கவிதழையவே. (௬)

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

இருமாலை யாகப் பரந்தபூங் காவிரி
யிரண்டிடைச் சூட்டுநெற்றி
யெரிமணிப் பாம்பணைத் துயில்கொள்ளு மொருமாலை
யிசைமுறை பழுத்தசெஞ்சொற்
றிருமாலை சூட்டுபவர் தொண்டரடிப்பொடித்
தெய்வமுனி யறிவின்வடிவாம்
செந்தா மரைத்தா ளுளத்தா மரைத்தலஞ்
சேர்த்துமென் றன்னைமுன்னாட்
டருமாலை யப்புணரி நீத்திடுந் தெய்வமான்
றருணமணி யாரமார்பிற்
றூர்பட்ட தண்டுழாய்க் காட்டுள்விளை யாடமகிழ்
சங்கேந்து கொண்டல்கன்னற்
பொருமாலை விண்டசா றோடமத வேழம்
புழைக்கர மெடுத்துநீந்தும்
பொங்கர்மலி யிடபகிரி மாலலங் காரனைப்
புகழுமென் கவிதழையவே. (௭)

## திருப்பாணாழ்வார்.

விழித்தா மரைத்துணையின் வேறுநோக் கலமென்று
விரிதிரைப் பொன்னிநாப்பண்
விழிதுயில் கருங்கொண் டலைப்பரவி யானந்த
வெள்ளத்து மூழ்கியியலின்
மொழித்தாம மொருபத்து மிருதோ ளணிந்தந்த
முகிலின்வடி வுட்காந்த
முனிவன் றனைப்பாதம் வழுத்துவென் கொல்லையம்
முல்லைப் புலத்துலாவித்
தெழித்தா மரக்கன்று தேடிமுலை யமுதந்
தெருத்தலை நனைப்பவோடிச்
செல்லமருண் மாலையிற் பின்செலுங் கண்ணனைத்
திசைமுக னிருக்குமுந்திச்
சுழித்தா மரைக்கடவுண் மாலலங் காரனைச்
சோலைமலை வீற்றிருக்குஞ்
சுந்தரத் தோளனைத் தொண்டனே னுரைசெயுஞ்
சொற்பாடல் வாழ்வதற்கே. (அ)

## சூடிக்கொடுத்தநாய்ச்சியார்.

பாடற் கரும்புழு துழாய்வாட வெயினின்று
பவளவா யீரமாறப்
பச்சைப் பசுஞ்சொற் புதுப்பாட லுஞ்சுருள்
பனிக்குழன் முடித்துகிர்க்கும்
வாடற் பழஞ்சருகும் வெட்டாங் கேசவம
லைகுனிய நின்றமுகிலும்
மாலைங் காரவ மிரப்பவருள் புதுவைவரு
வல்லியிரு தாடுதிப்பென்
* சேடற் பெரும்பள்ளி விழிதுஞ்சும் பாற்கடற்
சேர்ப்பற்கு மணிவரன்றிச்
சிலம்பாறு பாயுஞ் சிலம்பற்கு வெள்ளவொளி
தேங்கியலை வைகுந்தவா
ணுடற்கு முல்லைப் புலத்தா நிரைப்பின்
னடந்ததா ளண்ணலுக்கு
நான்மறைப் பொருளாய வழகற் குரைக்குமென்
னன்கவிதை வாழவென்றே. (க)

* சேடற்பெரும்பள்ளி - ஒன்றியற்கிழமைக்கண்வந்த ஆறும்வேற்றுமைத் தொகை. றகரம், வலித்தல் விகாரம்.

## மதுரகவியாழ்வார்.

மட்டோ லிடுந்தொங்கல் வகுளமணி நாறுதோண்
மாறன்வண் டமிழ்படித்து
வனசவீட் டுறையுமுனி தன்னாலு மொழிதொறு
மறைநாலு மொழுதளிக்கப்
பட்டோலை யெழுதியாங் கவனைபி ரைந்தாகவி
பாடிநெடு மாறனையும்
பாடாத மதுரகவி பிருதா ளிதிக்குவெண்
பைங்குவளை மென்றுமேதி
நெட்டோடை யுட்புகச் சுரிசங்கு துண்ணென
நிலாமணிக் கருமுதிர்ந்து
நெடுவரம் புந்தவழ்ந் தேறிவிளை வயல்புகுத
நெற்குலை யரிந்தமள்ளர்
கட்டோடு தலைமீதி லாகியுதிர் நெலனுடன்
கதிர்மணி யுகுக்கும்பாணர்க்
காமலையின் மாலலங் காரனைப் பாடுமென்
கவிதழைத் தோங்கவென்றே. (௰)

## எம்பெருமானார்.

மறைமயக் கெவரும் புலப்பட வுணர்ந்தறிய
வாய்மைபெறு பொருளுரைத்து
மாறுபடு சமயங்கள் வாக்கினால் வென்றுநிரை
வாரிதி வளாகத்தின்வாய்
இறைமயக் கறுதவிர்த் தியாவர்க்கும் யாவைக்கு
மேபிரா னாழிசங்கம்
ஏந்துமா லென்றுறுதி யாக்கிரா மானுசன்
றிருசரண நெஞ்சுவைப்பென்
பிறைமயக் குங்குறு நுதற்கோவி மார்குழிசி
பெய்தவளை யெற்றுபந்து
பிறழொளி மணிக்கழங் கிலைகொண்டு நாளும்
பெருங்கலை யிட்டுமுடனே

குறைபயக் குங்கண் பிசைந்தழு தசோதைதன்
கோபந் தணிப்பமணிவாய்க்
† குறுநகை விரித்தழுகின் மாலலங் காரனைக்
கூறுமென் கவிதழையவே. (௰௧)

## வேதாந்ததேசிகர்.

திருமாற் பயோததித் திருமாதர வமுதினைத
திருமகட் குயின்முகந்து
சேனைமுத லிக்கோப் பெயக்காரி ரேய்ச்சனைத்
தேங்கிநா தமுனி யாகும்
அருமாற் சடம்வார்ந் துயக்கொண்ட வள்ளன்மகி
வார்ந்துசீ ராமரென்வா
யால்வழீஇ யாமுனை ரியவுந்தி யூர்ந்துபூர்
ணரியக் சாலினெழுகிக்
கருமாற் றிராமா னுசக்குளங் கழுமியெழு
பானுன்கு தூம்புகாலக்
காசினிப் பணையுயிர்க் கூழ்வளர வயன்மதக்
காராக்கண் மேய்ந்தடாது
பெருமாற்கு விளையுள்வீ டடையப் புரந்தரும்
பெருவேலி யாமெம்பிரான்
பேசுபய வேதாந்த தேசிகன் றொழுவல்
பேரழக னுறையவே. (௰௨)

## மணவாளமாமுனிகள்

குணவா யுதித்தெற்று வேலைஞா லத்திருட்
கொள்ளைவெயில் சீத்தகற்றும்
கோகனக மணவாள னெனவடியர் தொல்லைநாட்
கொண்டவினை யிருளகற்றும்
மணவாள மாமுனிவன் மகிழ்வுடன் கருணைபொழி
மலர்விழியி னெம்மைநோக்கி
வயிறுபசி யாமனை வறளாம லொருமறை
வாய்த்தவிரு நாலெழுத்தே

† கோயம் - பி-ம்.

உணவாக நஞ்செவியி லிருபுறமும் வழியவார்த்
துயிர் தளிர்ப் பித்தவெங்கோன்
ஒளியிட்டு திருநாட்டு வழிகாட்டு தாட்கமல
முளமீது வைப்பனெட்டைப்
பணவா ளராவுலக முடைநாறு வெண்ணெய்பேய்ப்
பாவைதன் முலையுளமுதம்
பருகிச் செவந்தவாய் மாலலங் காரனைப்
பாடுமென் கவிதழையவே. (௰௩)

## ஞானாசாரியர்.

ஓட்டிக் கடுந்துநெடு நாடோட்டு வருதீய
வூழ்வினைக டம்வயத்தில்
ஓடுமைம் புலனையு மனத்தோடு நெறியினின்
றொருவழிப் படநிறுத்திக்
கூட்டித் தடஞ்சோலை மலைநிழன் மலர்க்கரங்
கோத்துவலம் வந்துகண்ணீர்
கொழிப்பமெய்ம் மயிர்பொடித் துளமுருகு தொண்டர்தங்
குழுவுடன் கூட்டிவேதப்
பாட்டிற் றருந்தமிழு மிருநா லெழுத்தும்
பசுந்தேன் பெருக்கெடுக்கும்
பைந்துழாய்ப் பள்ளியந் தாமத் தலங்காரர்
படிவுமென் னெஞ்சகத்துள்
நாட்டித் தளிர்ப்பித்த திருவாளர் தோழப்பர்
நற்றமிழ்ச் சீர்பதிப்போன்
நலமருவு மழகன் புரோகிதன் புனிதபத
நாண்மலர் வழுத்துவேனே. (௰௪

## அடியார்கள்.

அண்டர்க்கு நான்முகக் கடவுட்கும் வானநீ
ராறுபாய் சடிலருக்கும்
ஐரா வதப்பெரும் பாகற்கு மெட்டாத
வாழிமால் பதமிலையுநற்

றொண்டர்க்கு மன்புபுரி தொண்டாகுந் தொண்டர்க
டுணைத்தா டுதிப்பெனலைவாய்ச
சரிசங்க மூசலா டுங்கடற் பள்ளநீர்
சூற்கொண்டு நிங்கணிறையும்
கொண்டற் குலஞ்சொரியு முத்துங் கழைக்கண்
கொழிக்கின்ற முத்தும்வேழக்
கோடுசொரி முத்தமும் பூகத்தின் முத்தமுங்
குருமாசலிர் பொய்தலையுறும்
வண்டற் குரற்புகா வரிசியா காசந்த
மதுமலர்க் குழியலைக்கும்
மாலிருஞ் சோலைமலை மாலலங் காரனை
வழுத்துமென் னுவாழ்வதே. (௰௫)

பாயிரம் முற்றும்.

---

# காப்புப்பருவம்.

---

## திருமால்.

நீர்கொண்ட நெடுந்தாரை குறுங்கை தோய
நேமிவரைப் பெருவேலி சூழு மேழு
பார்கொண்ட தாளாள ரோங்குஞ் சோலைப்
பருப்பதத்த லலங்காரன் றமிழைக் காக்க
கார்கொண்ட கீரொன்று கட லிரண்டோர்
காலத்துத் தலைமயாந்த தென வசோதை
ஏர்கொண்ட கண்ணளினிழல் பாயக் கைம்மீ
தேந்துமலர்ப் செந்துவர்வா யிளைய மாலே. (௧)

## திருமகள்.

வேறு.

வளர்க்கும் பசுங்கிளிக் குமுதமும் பூவைக்கு
வரிமிடற் றனியலம்பும்
வளர்தருச் சோலையும் புறவுக்கு நிழலுமிழ்
மணிதருதா மாதுக்குவான்

விளக்குங் கலைத்திங்க ளுடம்பெடை யனத்துக்கு
விரிபொருட் டருகுகுக்கும்
விளைநறைக் கமலமுங் கொண்டுவெண் டிரையின்வரு
மெல்லிய லளிக்கமேருத்
துளக்குங் கடுங்கான் முகந்திரைக் குஞ்சிரைத்
துகள்பம்பி யுததிமண்டச்
சுழன்றிமை கரிக்கக் கடைக்கண் டழற்கற்றை
நாண்டர் சினத்தபுள்வாய்ப்
பிளக்கும் பிரானிசை முரன்றிதழ் குடைந்தூது
பிள்ளைவண் டாடுதுளபப்
பிரசமெறி சுந்தரத் தோளாளன் மடைமுதற்
பேராள ரிசைதழையவே. (௨)

## பிரமதேவர்.

ஆட்டுந் திரைக்குண்டு நீரக ழிலங்கைக்கு
ளாறுகால் பாயநறவம்
ஆறுபாய் தாமரைக் குலமாதை யுங்கடலு
ளாழியங் கதிரோனையும்
கூட்டுங் கடுங்கார் முகக்கொண்ட லைத்தலைமுச்
கொய்துழாய்ச் நாரணமேருக்
குவடுபடு சுந்தரத் தோளனைத் திருமங்கை
கொண்கனைக் காத்தளிப்பான்
ஈட்டும் பிழம்பனற் குளிரியா றலைக்கொல்லை
னில்லம் புகாதபத்தால்
எறியுஞ் ஞொலிபொங்க வாயுஞ் துயர்தட்டி
லேறுந்து கூர்மழுங்கா
தூட்டுந் தகிற்றலையி னெய்யுஞ் துறைபுகா
துடல்கறை படாதிருந்தும்
உடற்றும் பெரும்படை தொலைக்கும்வாக் காயுதத்
தொருகமல மறைமுனிவனே. (௩)

## சிவபெருமான்.

வேறு.

அருமறைமொழியு நூலிணைநறிய கமலக்கரங்கள் யாப்பவும்
அளியுளர்பதும மாளிகைமுனிவன் வதுவைச்சடங்கு காட்டவும்
அருள்விளையிமய மாதுலனொழுகு புனலைத்தடங்கை வார்க்கவும் [வும்
அடைபொதிதுளவ நாரணன்வெளிய பொரியைக்கொணர்ந்து தூற்ற
இருவருநறுநெய் தூவியவெரியை வலனிற்சூழன்று போற்றவும்
இருகரமுளரி நாண்மலர்சிலையின் மயில்பொற்பதங்க ளேற்றவும்
எழுகதிருலவு வர்ன்வடதிசையி லுடுமுற்றம்வந்து காட்டவும்
இடுதிகின்முகப டாமுலைபுணர வுமையைப்பரிந்து வேட்டவர்
மருமலர்பொதுளி வாலுழைழவளரு மருதைத்தவழ்ந்து சாய்த்திடை
மடவியரிழுது தோய்முடைவிரவு துகிலைக்குருந்து சேர்த்துளம்
மகிழ்வருகுரவை நாடகமபர விரலைத்தெரிந்து கோத்திலை
மனைநடுவுறியின் வாயளைகளவு கொளவற்றநின்று பார்த்தலை
பெருகமுதுகொள வானிரைவயிறு நிறையப்பசும்புன் மேய்த்தரை
பிணையணைகயிறு நார்முடைபடலு மடையப்பிணைந்து தூக்கிய
பிடவலைபடலை யாயனைவிபுல வெளிதொட்டணிந்த கோட்டயல்
பிறைதவழிடப மால்வரையுறையு முகிலைப்பரிந்து காக்கவே. (௪)

## தேவேந்திரன்.

வேறு.

நறைகமழ் $ காழகில்சுட்டபுகைமுழுப்
பதம்வாய்ப்பமதலெழுசியப்போத்துகள்
நடையடிகாவலரொற்றிடவையிற்
கவடேய்ப்பவிடைபறழ்நாலத்தாய்க்கலை
நணைவிளைதாழ்சினைதத்தி * முலைமுடக்
குடில்சாய்ப்பமடமயில்கூடிக்கூத்தெயு
நரையுருமேறுசிலைப்பமுடிவிதிர்த்
தரவாற்றல்கெடவிடர்தேடிப்போய்ப்புக

$ காரகில். பி-ம்.
* யுலைமுடக். பி-ம்.

உறைநுகர்ராதகம்விக்கல்விடவிடைக்
குலமாக்கள்படன்முடையோலைக்கீழ்ப்புக
ஒளியெழுகோபநிரைப்பநிலவுபுட்
சிறையாட்டி மகிழ்பெடையொடிச்சேக்கையில்
உறைதராவோசனைபட்டமணமுதைப்
புனம்வீக்கமுரிவரார்சாலைப்பாட்டின
அழைழகலையோடுதெவிட்டவனசமொட்
டிருள்சீக்குமிளவெயில்காணற்கேக்கற
அறைகடலீர்விளையிப்பிவிழுமழைழத்
துளியேற்றுநிலவுமிழுமாரகூற்கொள
அகன்மடல்கோடல்விரிப்பவெயிறுநட்
டுளைகாற்றிநெடுமயிமோனச்சாத்துபு
அகப்படுகூவல்கொழிக்குமமுதவெப்
பெயுமாத்துவதிருயில்வாயைத்தாட்கொள
அகமகிழ்கேள்வர்தமைக்குமரிவையர்க்
குளமூட்டுமளவறுகாமத்தீச்சுட
மறைமொழியாளர்வழுத்தியனலொழுக்
கவியேற்றுவலம்வருமோதைக்கார்ப்புயல்
மலர்நிலமாதுகுளிப்பமழைழகொழித்
தெழுமோக்குசார்பதிதாளைப்போற்றுதும்
மணிநிரைமேயவெடுத்தசமைழமிடற
றிசையூற்றிமலர்புரைதாளுட்சேப்புற
வனநடுவேவாயுயிலைத்தவழகனைப்
பொழில்வாய்த்தகுலமலைமாலைக்காக்கவே. (ரு)

## ஆதித்தன்.

### வேறு.

பரியமாபுறற்பிறைநகப்பிணரடிக்கைப்
பருப்பதந்தண்டுறைதொறும்
படியமடைபடுகாடவாய்திறந்திழிமதம்
பாயமணியமுனைதோயும்

முரிதிரைப் பகிரதி கடக்குஞ் சிலம்பாற்று
முதல்வனைக் கடவுள்வேத
முறையிடுந் தாமரைத் தாளானை வண்டுழாய்
முகிலைப் புரக்கவெள்ளைப்
புரிமுக வலம்புரி முழங்கச் சகோரவெண்
புட்கிரை யாரிக்கும்வானம்
பூத்தமதி கரமொழிய விளைஞரைக் காமன்
பொருங்கணை துறப்பவெழுபண்
தெரிவண்டு சிறைவிட் டுவப்பக் குணதுவளர்
திக்குவெள் ளணியெடுப்பத்
தேமுளரி தளைவிடப் புவியிரவு விடவலைத்
திருவவ தரித்தருடரே. (௬)

## விநாயகக்கடவுள்.

ஊற்றும் பாகுந்தே னகிற்கா டெறிந்தெயின
ருழுபுனந் தினைவிளைதப
ஊட்டமு விடுஞ்சாரன் மலைமுழுது பொதிவெப்ப
முடைதிரைத் திவலைதூற்றி
ஆற்றும் புனற்சிலம் பாற்றருகு விளையாடி
யாயிரம் பொங்கர்தங்கி
யாயிரங் குண்டுநீர் மடுவுட் படிந்துவரு
மானையைக் காக்கசங்கை
தூற்றுந் தரங்கவொலி யிற்றுஞ்சி யழுகிலந்
தோட்டுணர் * விழைந்துசெங்கைத்
$ துணைச்சிறு பறைக்குர லெதிர்ந்திதழி நெடுவனஞ்
சூழ்ந்துடலி னிலவுவெள்ளம்
காற்றும் பொடிப்பூழி கால்சீத் தெரிந்திறைவி
கழைநெடுந் தோள்வரிக்கும்
கரும்பினிற் கைவைத்து வெள்ளிப் பொருப்பெங்கை
களிகூரவரும் வேழமே. (௭)

---

* வளைந்து. பி-ம்.

$ தொளை. பி-ம்.

## முருகவேள்.

வள்ளைகா னீக்கிச் செழுங்குவளை மென்றுகய
வாயெருமை குழவியுள்ளி
மடிவளஞ் சொரியமுது மடுநிறைப் பக்கமல
மண்டபத் தரசவன்னப்

பிள்ளையா ழும்புன லுறந்தமு தருந்திவெண்
பேட்டிளந் தாயெகினம்வாய்
பெய்யிரை தெவிட்டுமகன் மாவிருஞ் சோலைப்
பிறங்கன்முகி லைப்புரக்க

கள்ளையூ றுந்தருத் தறியுண மற்றேவ
கன்னியர் களஞ்சூழுநாண்
கழலாம லைரா வதப்பெரும் பகட்டூழற்
கானம் புகாமலமுதம்

கொள்ளைபோ காமற் புரந்தரன் படுசிலைமறக்
கூடம் புகாமல்வெந்தீக்
கொளுந்தாய லகனெடும் பொன்னக ரளிக்கின்ற
கோழிப் பதாகையானே. (அ)

## வைரவன்.

வேறு.

புடைவளை ராரப் பரியரை பேரப்
புதறலை சாயத் தடிபட விருகரை
புகர்மணி வாரிக் குனிதிரைவீசிப்
புனலுமிழ்வாவிக் குருகெழநடுவுயர்

திடரகழாய்நெட் டகழ்திடராகச்
சிறைபொரும்யாணர்ப் பரிபுரநதிவரு
சினைவளர்சோலைத் திருமலைவாழ்கைச்
சிலைமுகில்காவற் புரவலன்வெளிபொதி

கடையிருள்வேர்விட் டெழுமுழுமேனிக்
கடல்விடுசோரிட் புலவெழுவடிபுரி
கவைபடுசூலப் படைதொடுபாணிக்
கனலமிழிவேணிச் சடாமணிநிறைவிரி

படமுடி நாகப் புரிபுபவீதப்
பலிகொள்கபாலப் புயனுருமெறிகுரல்
படுசுருடோலைக ர முலவிழிஞாளிப்
பணைமுதுகேறித திரிதருமிறைவனே. (கூ)

சத்தமாதர்.

வேறு.

வருபுனலவனி புதைப்பக்கோட்டின்
முழுகிநிமிர வலைவறவெடுத்தவள்
மதமழைகரட முடைத்துச்சாய்க்கும்
வெளியகரியின் முதுபிடர்புரப்பவள்
மாகதவளறு திரட்டிக்கோட்டு
நெடியபசிய களமயிலுகைப்பவள்
மலர்பொதுளிதழி தழைப்பப்பூக்கு
மமுதமொழுகு மதிவகிர்முடிப்பவள்

இருகடைவிழியு நெருப்பலைபக்காற்று
மலைகைசுழல வருபிணனுகைப்பவள்
இமையவர்வயிறு நிறைப்பத்தேக்கு
மமுதகருணை கடைவிழிபழுத்தவள்
எறிவரியுதறு சிறைக்கொத்தேற்றை
யெகினநடவு மறைமொழிமிடற்றினள்
எணவிவருலகு துதித்துப்போற்று
மெழுவர்முளரி யடிமுடியிருத்துதும்

அரன்முதலெவரு நினைத்துப்பார்த்து
மறியவரிய விழைமபெருமயக்கனை
அகிலமுமுதர மடக்கப்பூத்த
கமலநறிய நறைவழிபொகுட்டனை

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

அழகியகுரவை நடத்துக்கேற்ப
வொருவைகநடுவ ணலமருகுடத்தனை
அலைகடலமலை யுதித்துத்தோற்ற
வுருவுவிளையு மளவறுகளிப்பனை

விரியொளியுததி கொழித்துக்கோத்த
வழிவில்பரம பதமுதுபுரத்தனை
விடையுரமுழுத மருப்புக்கீற்றி
விடையர்மகளி ருழுமுலைமுகட்டனை
விரிதலையருவி தெழித்துத்தாக்கு
மெழிலிதவழு நிலவியபொருப்பனை
விளையிளநறவு சுழித்துத்தூற்று
துளவமுகிலை யழகனையளிக்கவே. (௰)

## மூப்பத்துமூவர்.

### வேறு.

விரிதடமத்தகத் துச்சிதாழ்சூழிக்கடல்
விளைகடம்விட்டொழுக் கெட்டுவாரணத்தினர்
விரியுளைநெற்றியிற் கொட்கும்வாலெழிற்குரம்
விரைபரிபெற்றிரட் டித்தவான்மருத்துவர்

இருகடையுட்குலமழத் தொற்றைமேருவிற்றொடும்
இறையவர்பத்தொடொற் றித்தவேறுகைப்பவர்
இருபதிலெட்டொழிப் பித்ததேர்துரப்பவர்
எனவிவர்தொக்களித் தற்கியாம்வழுத்துதும்

சொரிபருமுத்திணர்க்கக்குபூகநெட்டிலை
தொடுசடைநெற்குலைக் குப்பைநாவளைத்துழு
சரிவளைமட்கரைப் பற்றிமேதியுட்குளி
தொடுகுளமுக்குளித் தெற்றுநீரொலிப்பெழ

மலரயுயர்பொற்பறக் கொட்டைபாழ்படச்சிறை
மடவனம்விட்டெழப் பெட்டவாளைசெய்ப்புக்கும்
மலர்வதிபுட்குலக் கத்தருததொத்தளி
வளர்பொழில்வெற்பினிற் பச்சைமாதழைக்கவே. (௰௧)

காப்புப்பருவம் முற்றும்.

## இரண்டாவது
# செங்கீரைப்பருவம்.

---

சுருள்விரிமுழுமுதல் வாழைக்கூனற்
குலையினின்மிடறுடை பூகப்பாளைத்
தலையினிலடைநறு விண்டாழுஞ்சீதச்
சுனையினின்முகைநெகிழ் காவித்தாழிப்
புடையினினெடுமணல வாரித்தூவைதக்
கலனணிமகளிர்க ரங்கோலுஞ்சாலச்
சுவரினிலலமரு முசற்காவிற்
படுவினிலொழுகிய சோனைத்தேனிற்
சுழல்படுமளிகள்கு டைந்தாடுங்காவிற்
சொரியுமுருடல்பொறி யோலைத்தாழைப்
பரியலையினின்மறி நாகைத்தேடிக்
கவரிகண் முலையில்வ ழிந்தூறும்பாலிற்

கைதவழ்முரிதிரை பாய்நெட்டோடைச்
சுழியினில்வழியினி னீர்குத்தோதைச்
சிறையினின்மாவரா லம்பாயுஞ்சாலிற்
கழனியிலரைதிரள் காய்நெற்சோலைத்
தலைவளைகுலையரிஞ் சூரிற்றாமக்
குழலிடைமடவியர் வண்டோடுஞ்சூழக்
கடையினி லுதறிய தாற்றூவிப்
புலவெழுமுதுசுற வாளைப்பாயசுற
றகழியிலருமலைபு கண்சூழும்பாணுக்
கதிரொழுபுரிசையி லூரிற்போரிற்
றெரியினிடவினில் யானைக்காணற
றுறையினின்மதுரம்பி ளைந்தோடும்பாகிற்

பொருபுனலெழுவரி வாளைப்பூசற்
படவிடுபெருமடை வாயிற்சாதித்
தொடரிணர்நறுவழை சிந்தாரம்போலும

பொதிமுகையவிழ்மலர் வேரிப்பாயற்
றுணைவிழிதுயில்வதி மேதிப்பாழிச்
சுவலினில்வனச முகங்காலுந்தாதிற்
புழைபடுநெடுநிலை நாளப்பானற்
கழியினின்மதனடு சாபக்காணிற்
சரிகயலணிவெ ழுந்தேறுஞ்சாரிற்
புதல்படுதுகிர்கொடி மூடித்தீகக்
கடவியிளவெயி ரேய்பொற்பூழித்
தெருவினிலிளைஞர்க ணின்றாருந்தேரிற்
திருவளர்கடிமனை மாடத்தேணிப்
பழுவினினிலவுமிழ் தூவிப்பேடைக்
குருகெழுநதியலை சென்றேறுங்கூலத்
தினில்வினைபுனவிதண் மீதிற்கால்பட்
டெதுளைமணிபொதி சூலைக்காலச்
சரிமுகவரிவளை வந்தூருஞ்சாரற்
திருமலையழகர்த டாகத்தோடைப்
புகர்முகமதகரி கூவச்சேணப்
பிடர்வருமழைமுகில் செங்கோ செங்கீரை
திருமடமகண்மகிழ் கூரப்பாடக்
குருமணியிடறிய மார்பிற்பீடத்
திளையிடுமழைமுகில் செங்கோசெங்கீரை. (க)

வேறு.

தொளைபடுகரட மூற்றெழுத்தேங்கி
வழிமதம் வண்டே டுஞ்சாயச்
சுழல்வருபெடையெ ளுக்கரத்தூர்ந்த
புயமெருடல் கண்டேடுங்காதற்
களிவருபிடித ழீப்பணைச்சார்ந்த
கறையடி மென்றூர்வங்கூரக்
கவுளுழைசெருகி நாட்பிறைப்போன்ற
நகநுதி மண்சீவுந்தானைக்

குளிர்புனலலைய வாட்டுடற்பாங்கர்
வழியவெறிந்தாரந்தூவக்
குளிறியவருவி நீர்க்குரற்கேன்று
கரிகிரை கண்சாயுஞ்சாரற்

றெளிமதுவொழுகு காக்கிரித்தோன்று
மழைமுகில் செங்கோசெங்கீரை
திருமலையழக வாக்கிசைக்காம்ப
மழைமுகில் செங்கோசெங்கீரை. (௭)

வேறு.

இருவிழிசெவந்து கயலொடுமயங்க
வெறியுமாநீ ரோடைகுடைந்தாடு
இடைவெளிநுடங்க விருபுறம்விழுந்த
கயிறுகால்பூ ஞூசலுதைந்தாடி

ஒருமுலையகங்கை யொருமுலைபுறங்கை
யறையவோவா நால்வருபந்தாடி
யொருபதமகண்ட நிலை*புகழ்கொண்ட
முதன்மைபாடா வேழுகபுங்காடி

வருகுறவர்தந்த மடமகளிர்வண்டல
விழுவுமாறு நீர்பொதிமஞ்சாடு
மதியுழவழிந்த வமுதநதிபொங்க
வருடைகாலாழ் வேரலிளஞ்சாரல்

அருவிவரைநின்ற வழகவிதழ்பம்பு
துளவமாலே யாடுகசெங்கீரை
அருமறைவிரிஞ்ச னிமயமயிலகொண்க
னமரர்கோவே யாடுகசெங்கீரை. (௮)

முலையமுதலம்பி விழநெடுவரம்பு
குறியகாலாழ் மேதிகயம்பாய
முருகிதழ்பொதிந்த குவளைகண்மடங்க
விடறிவாலால் வாளைவெருண்டோடி

* (வெளி பி - ம்.)

இலைதலைவிரிந்த கமுகமடல்விண்ட
மிடறுவாய்சூழ் பாளைபிளந்தேகி
இமையவரருந்து மதியமுதகும்ப
முடையநீர்மேய் மேகநீவிசும்பூறி

மலையுடல்குளிர்ந்து விடவெளியெழுந்து
முழுகுதீயா டாலைநறும்பாகு
வழியும்வயன்மஞ்ச ளிலைமிலைசவிழுந்து
களிறுபோலே சாரன்மணந்தோதை

அலையருவிதுஞ்ச மிடபமலைநின்ற
துளவமாலே யாடுகசெங்கீரை
அருமறைவிரிஞ்ச னிமயமயில்கொண்க
னமரர்கோவே யாடுகசெங்கீரை. (௮)

வேறு.

இருகுழைமதர்விழிகிழிப்ப வலமருமகிழ்குரவைதொட்ட
பொதுவிய ரோதிபுறந்தாழ
இளநிலவுமிழ்மதிபகுத்த சிறுநுதல்குறுவெயர்முளைப்ப
வமைபொரு தோள்புளகங்கூர

மரகதவரையகலமுற்ற தினிவருவரர்பதிவருத்தம்
இலையென வார்வம்விளைந்தோடி
வரைவெளிகுழுமிநடமிட்ட தெனவொசிகொடியிடையொளிப்ப
இளையப யோதரநின்றாட

விரியுலகமுமுலகொடுக்கு முதரமுமசையவலர்செக்கர்
மலர்புரை தாள்கள்செவந்தேற
விரைகெழுதுளவு நறைகக்க வொருகரமிசைகுடமுருட்டி
இசைவழி யாடுபரந்தாம

அருவினைபுறமிடவெருட்டி யடியவரளவினருள்வைத்த
மழைமுகி லாடுகசெங்கீரை
அளியுழுபொழில்புடையுடுத்த வடுபதிதவழிடபவெற்பின்
மழைமுகி லாடுகசெங்கீரை. (௯)

---

§ (மேகமசம்பூறி, பி - ம்.)

வேறு.

முளைக்குந் திருப்பாற் கடற்பெருஞ் சூன்முகில்
முகக்கண் கருமல்வட்ட
முகமதி வெளுப்புறு மற்பச்சை மரகதம்
முகடிளகி யொழுகுபாடம்

விளைக்குங் குழம்புதோய்த் தெற்றுபல நூறென்ன
மெய்ப்பசு நரம்பெடாமல்
வேய்நெடுந் தோள்கண்மெலி யாமலா விலைவயிறு
வீங்காமன் மனைமதிற்பால்

வளைக்கும் புகைப்படலை மண்டொடா மற்சால
வயவுநோய் கூராமனுள்
வளர்திங்கள் பத்தும் புகாமற் பெருந்தூணம்
வாய்த்தகோ ளரிகளித்துத்

திளைக்கும் பெடைக்குருகு சூழ்சிலம் பாற்றிறைவ
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே. (௬)

சாய்க்கும் *கடும்புனல் பரந்தோட வுரகனற்
றருணமணி யணவுசூட்டுத்
தாழ்கடம் பிற்குதித் தாடலுங் கொங்கையந்
தடநெடுங் கிரிசுமந்து

மாய்க்குமெ னுசுப்பிளங் கோவியர் வளைக்கர
மலர்த்துணை பிணைத்தாடலும்
வட்டவாய் முடைபடுங் குழிசியிற் றீயாடி
வழியுமின் பால்பதத்திற்

றோய்க்குந் தயிர்த்தலையின் மத்தெறியு மிழுதுணைத்
துளவோடு கரியமேனி
துவளநின் றாடலும் முன்புள்ள விப்போது
தொண்டர்தம் வினையிரண்டும்

---

* (பெரும், பி - ம்.)

தேய்க்குந் திருத்தாள் குனித்துநின் றழுகனே
        செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
        செங்கீரை யாடியருளே. (எ)

முருகுண்டு நாகிளம் பெடைவண் டியாழினிசை
        முரலவளி தடவவாடும்
முகைமுக முறுக்குடைந் தவிழ்தரும் பூவைகிரி
        முதுகுவலம் வந்துவீழ்ந்து

கருகுந் திரைப்பரவை மேய்ந்தகல் விசும்பாடு
        கருவிமழை யாடுகொள்ளைக்
கண்ணகன் பொய்கைக கருங்காவி யாடினங்
        கருவிளந் தொகுதிபிள்ளைக்

குருகுஞ் சலஞ்சலமும் விடுபிறுஞ்சு துஞ்சாக்
        கொழுந்திரை கொழித்ததிவலைக்
குளிர்புனல் பரந்தாடு காளிந்தி யெனவலை
        கொதிப்பக் கடுங்கார்முகம்

செருகுங் கணைக்குரிசி றிருமேனி துவளநீ
        செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
        செங்கீரை யாடியருளே. (அ)

கறைபாய்ந்த குலிசப் படைப்பாக சாதனக்
        கடவுளும் விபுதர்குழுவும்
கடும்பொடு கடும்பசி கெடுத்தருந் தப்பணக்
        கட்செவிப் பாப்பெயிற்றுப்

பிறைவாய்ந்து காந்துங் கடுங்காள கூடவெம்
        பேழ்வாய் திறந்தழுத்துப்
பிடித்துக் குதட்டியுமிழ் மிச்சிலும் போகமலர்
        பிரசங் கொழித்திறைக்கும்

அறைபாய்ந்த நீருடற் கழுவிநெடு வெண்ணிலா
வமுதுண்ணு மதியளிக்கும்
ஆடுதலை யருவிபாய் திசைநான்கும் வெளியின்றி
யளிகோடி புடையலைக்கும்

சிறைபாய்ந்த வளிதருஞ் சோலைமலை யழகனே
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே. (௯)

ஏற்றுவண் டறுகால் குடைந்தாடு பொங்கர்விளை
யிளநறுந் துளிதூங்கியும்
இருளுடன் முரக்கலை குறிப்பப் பசுந்தே
னிழிந்துமதி தவழநிலவு

தூற்றுவெண் டிரையமுது சுழியெறிந் துந்திரைத்
தொடுகடற் புனன்முகந்து
சூற்கொண்ட கருவிமுகி லிடறியுந் நாளத்
தொளைக்கைப் பொருப்புந்தியை

ஊற்றுவெங் கடநீர் கொழித்துமக விதழ்நெரிந்
துடையும்வண் டுளவமாலை
யொழியாது மதுவோட வுனதுசெந் திருவின்முலை
யுழுதலா விளகுகளபச்

சேற்றுறு புயம்போ லசும்பறு மலைவாண
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே. (௰)

குரைக்குந் திரைத்தரைப் புரவிபூண் டரசிளங்
கோமக னெடுத்த செங்கோல்
கோநக ரிலங்கையிற் பரிதிதேர் பூண்டவேழ்
குரகதந் தூண்டுமுட்கோல்

கரைக்குங் கடாக்களிற் றமரேச னேகநாட
கடுஞ்சிறை கிடந்தகூடக்
கபாடந் திறக்கின்ற திறலுகோ னறவொழுகு
கமலமகள் விழியினுளவாய்

உரைக்குங் குழம்புபடு மஞ்சனக் கோல்பிலத்
துள்வீழ நான்மறைக்கும்
ஊன்றுகோ லாகமுடி பத்துடைய கள்வன்மே
லொருகோ லெடுத்துமுகிலைத்

திரைக்குந் துணர்ச்சோலை யிடபகிரி நின்றமுகில்
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே. (௰௧)

செங்கீரைப்பருவ முற்றும்.

---

## மூன்றாவது

# தாற்பருவம்.

---

உடலியலுணரூட்டியநெடிய தூணுவேசாநால்
உகம்வருமளவு தோற்றியவீருண நாணுருபாநாள்
முடியிடைமுதலி லாத்தனியுறையு மூவாமூதாளா
முனிமகமுடிவு காத்திடுசரண சாலாகார்வாணு
மடிநிரைபுறவு மேய்த்ததுழலினைய கோபாலேசாவான்
மகிதலநிறைவு காட்டியகரிய மாயாமாகாயா
அடியிணைபருகி யேத்திடுமழக தாலோதாலேலோ
அரவணையுததி மேற்றுயிலழக தாலோதாலேலோ. (௧)

அடியவராளி னோக்கியகருணை யாசாபாசாபூ
வயனொடுவானிறு சூற்கொளநெறுகிய லோகாலோகாதே
மடலவிழ்கமல வீட்டுறைவனிதை லீலாகாராநேர்
வருசகடுடைய நீட்டியசிறிய தாளாதாள்சூடா

முடியுடையவுண ரோட்டெழுகடவு சேனூடாபாண்
முரலளிநறவு வாக்கியதுளவு தோடேயாமோதா
உடுபதியிடறு காக்கிரியழக தாலோதாலேலோ
உடைதிரையமளி மேற்றுயிலழக தாலோதாலேலோ. (௨)

வெருவரகிரய மூட்டியகொடிய தீவாய்வீழாதே
விழைவுறுமடியர் வீட்டுறநயரில் கோதாய்வேதாநால
அருமறைமுதன்மை கிழ்ப்புடவமுத மாராவாயாலே
அருள்குடமுனிவ னுத்தமிழ்புணையு நூலாலோவாதே
இருபுயம்வகுள ஈற்றியமதலை மாறுபாடாய்நீ
யெமையெண பழுதி நாட்டொருகுருகை மூதூராழ்வார்பால்
உருகெழுசிறுக னீர்ததிடநடவு தாளாதாலேலோ
உடைதிரையமளி மேற்றுயிலழக தாலோதாலேலோ. (௩)

தொடுகடலலையின் மோத்துறுமுதிய தோண்மீன்மேயாமே
துகள்வெளிவயிறு போய்ப்புகநிலவு தீயேழ்நாமேயா
அடுபசிதணிய வேற்றெறிவளியி னுவாயோடாமே
அரிதுகிர்பொரிய மோட்டுடலலகை யூர்தேரோடாநீர்
இடுமணல்சுழல வார்த்திரநிவக மேகாவாய்காவாய்
இருநிலம்விடவெ டாச்சிலைவளிய கால்பூணுவாயே
விடுமடல்புனைவி ழாப்பொலிசயில நாடாதாலேலோ
விரிதலையருவி தூக்கியசயில நாடாதாலேலோ. (௪)

மழைபடிகடலு லாத்திரிபடவு சூழ்பாய்மீதேபோய்
மடமயிலகவி யாட்டெழுவனைகள் கால்சூழாதாயா
அழகியபுறவு கூட்டுணைவரிகொள் போர்மேல்வாமானேர்
அடிவிழவுகள வீற்றுளவிளைய சேதாவாய்பாய்பால்
எழுதிணைகவர வேட்டுவர்வலைகள் பேருவாலாலே
எறிசுறவுறைய நாட்டிதனைடுவு சூழ்கால்கீழ்மேலாய்
விழுநிலம்விரவு காப்பயில்சயில நாடாதாலேலோ
விரிதலையருவி தூக்கியசயில நாடாதாலேலோ. (௫)

## தாற்பருவம்

### வேறு.

முடக்குந் திரைப்பா லாழிநெடு
முகட்டிற் றுயில விருசெவியில்
மூல மென்னுங் குரல்புகுமுன்
முளரிப் பொகுட்டு வீட்டிலொற்றை
வடக்குங் குமச்சேற் றிருகொங்கை
மங்கை விளைந்த தெதுவென்று
மலர்க்கை நெரிப்ப வரவர
வணங்க வுதறி விசும்பிமைப்பிற்
கடக்குங் குடகாற் றெறிசிறையக்
கலுழச் சேவற் பருமபிடர்க்
கழுத்தின் மேற்கொண் டப்புள்ளைக்
கால்கொண் டணைத்து விண்பறந்து
நடக்குஞ் சரத்தின் முன்சென்ற
தலைவா தாலோ தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
தலைவா தாலோ தாலேலோ. (௪)

எடுக்கு மிழுதோ டழுதோயு
யேகத் தொடரு மசோதைகரத்
தெட்டப் படவு மொருவருக்கு
மெட்டப் படாத புயல்புயலைக்
கடுக்குந் திருமே னியினழுக்குங்
கைம்மா றிருப்பப் பின்னுதவும்
கைம்மா றிலாத கடலபசிய
கனக வுடுக்கைத் திருமங்கை
உடுக்கும் பாசங் கிடப்பவுளத்
தொன்றின் பாச மிலாதபச்சை
யோங்க லென்று மறைநாலு
முரைப்ப விரவி யுருட்டாழி
தடுக்குந் திருமா லிருஞ்சோலைச்
சயிலப் புயலே தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
தலைவா தாலோ தாலேலோ. (௫)

யாழுங் குழலும் பழித்தமொழி
　　யிடையர் மகளிர் குழைகிழிய
வெறிந்து செவந்த விழிவாளி
　　யிருக்கும் பகுவாய்த் தூணியலை
சூழுங் கடலின் றளித்தமணி
　　தூற்றுங் கதிர்வெப் பொழியவிலத்
தோகை முகத்து மகரந்தந்
　　துளிக்குஞ் சிவிறி திருமார்பில்
வாழுங் கமலப் பொகுட்டுமயின்
　　மலர்த்தாட் டுணையிற் பொதிந்ததுகள்
மாற்றும் பசும்பட் டாடையென
　　வரைத்தோள் கிடக்கு மளிப்படலம்
தாழுந் துளபத் திருப்பள்ளித்
　　தாமப் புயலே தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
　　தலைவா தாலோ தாலேலோ. (அ)

நறைக்கட் பொகுட்டு மலர்குவிய
　　நளினந் திகைப்ப முகைக்குமுதம்
நாட்பூ வெடிப்பத் திகைப்பவெறி
　　நளிநீர்க் கயத்து ளுறைநேமிச்
சிறைப்புட் பேடை யுடல்பிரியத்
　　திகைப்பச் சகோர நிலவேட்கத்
திகைப்ப விலங்கு வதிதேடத்
　　திகைப்பப் பறவை பார்ப்புள்ளிப்
பறப்பத் திகைப்ப நறைப்பொழில்கள்
　　படியத் திகைப்ப வேள்சிலையிற்
பாணங் கொளுவத் திகைப்பவெயில்
　　பம்புஞ் சுடரை யெல்லெனவான்
மறைப்பத் திகிரி தொடுஞ்சோலை
　　மலையிற் புயலே தாலேலோ
மந்தா கினியும் பரிபுரமும்
　　வளரும் பதத்தாய் தாலேலோ. (௯)

வேறு.

மகரங் குளிறுங் கனைகடன் மேய்ந்துயர் மலையின் றலைதுஞ்சும்
மழைமுகி லென்றெக் காலமுமிதழி மலர்ந்தலர் பொன்னூற்றச்
சிகரந் தொறுமட மயினட மாடச் செக்கர்க் கோபமெழச்
சினைவளர் காயா வகமட லூழ்ப்பச் சிதறுந் தளிபகுவாய்
நகருஞ் சாதக மணவத்தளவந் நனைமுகை விடமின்போல் [யத்
நுண்ணிடை துவளச் சதிரிள மங்கையர் நுரைவிரி சுனைகுடை
தகரங் கமழுங் குலமலை தங்குந் தலைவா தாலேலோ
சங்கந் தவழும் பரிபுர நதியின் றலைவா தாலேலோ. (௰)

வேறு.

அளிக்குந் தரைக்கங் கரந்தவுண
னகங்கை நிறைந்த நீர்வார்க்க
ஆழிப் பொருப்பு வேலியுல
கடிக்கொண் டோங்கி மழைக்கருணை

துளிக்குங் கமல மிரண்டுமறை
தோயுங் கமல மொன்றுமொளி
தூற்றுஞ் செக்கர்த் துகிருமிரு
சுடருஞ் சுரும்பி னிரைபரந்து

களிக்குந் தோட்டு நறைத்துளவக்
காணுஞ் சுமந்து வெளிவளரும்
கரிய பூவை மதிதவழ்ந்து
காலு மமுதப் பெருக்கிலுடல்

குளிக்குஞ் சிமய விடபநெடுங்
குவட்டுக் குரிசி றாலேலோ
குன்ற மெடுத்து மழைதடுத்த
கோவே தாலோ தாலேலோ. (௰௧)

தாற்பருவமுற்றும்.

## நான்காவது

# சப்பாணிப்பருவம்.

---

ஒருமுறையுண்டு வயிற்றுமலர்க்கு ளுதித்தவனப்பாகன்
உமைமடமயிலை யிடத்திலிருத்தி யிருக்கும்வலப்பாகன்
உடலியலவுண ருடற்கறைகக்க வழுத்துமுகிர்ச்சேனம்
உததியினடுவு துயிற்சுவைமுற்றிய வட்டவணைச்சேடன்

இருள்புறமிரிய நிரைக்கதிர்விட்ட வலக்கண்வெயிற்பானு
இதழ்பொதிகுமுத மலர்த்துமிடக்க ணெழுக்கமுதப்பானு
எழுதுதலரிய மறைத்தமிழ்முற்ற வடித்தவிசைப்பாணன்
இழுதொழுமுடைகமழ் கொச்சையிடைச்சியர் பெற்றகுலப்பூவை

முருகுடைகமல மலர்த்தவிசச்சி யிருக்குமனைத்தீபம்
முகின்முதுகிடறு கடற்றலைவட்ட மளிக்கும்வெதிர்க்கோலன்
முளைநெகிழ்தொடையன் முடித்துதறித்தரு சொற்புதுவைக்கோதை
முதுகிடவிபுதர் மிடற்றுமுழக்கு குரற்கடவுட்கோடு

குருகுலநிருப ரமர்க்கணிருட்டை யளைத்தபகட்டாழி
குரைகழலடியை வழுத்தியுளத்தின் மகிழ்ச்சியுறப்பாடு
குனிதிரையெறியரு விக்குலவெற்பிறை கொட்டுகசப்பாணி
குவலயம்வெளியற வைத்தபதப்புயல் கொட்டுகசப்பாணி. (க)

விழிதுயில்பெறமணி நெற்றிகுயிற்றிய தொட்டிலலைத்தேமும்
விரைகெழுபுழுகுநெய் பொத்திமுகத்தலை பித்தைமுடித்தேமும்
எழுகதிர்விழுபொழு துப்பிலைசுற்றி யணற்றலையிட்டேமும்
இளநிலவுமிழ்மதி சுட்டுமுனக்கெதிர் முற்றமழைத்தேமும்

அழுகுரறணிய மருட்டியணைத்தொசி யொக்கலைவைத்தேமும்
அடிதொழுமிமையவர் வர்க்கமுமொப்ப வுவப்பமுடத்தாழை
கொழுமடணகவளி புக்குழுவெற்பிறை கொட்டுகசப்பாணி
குவலயம்வெளியற வைத்தபதப்புயல் கொட்டுகசப்பாணி. (உ)

திருவயிறமைவா வைத்தருள்வைத்த வளப்பிலுயிர்ப்பால
திரைவிரிபுனல்வெளி பொத்துவடத்திலை முற்றுதுயிற்பால

வரிசிலைகடைகுழை யக்கடல்சுட்ட விழிக்கடையுட்கோப
மழைமுகிலெறிதுளி தட்டுமலைக்குடை யிட்டநிரைக்கோப

முருகெழுமிளநறை கக்குபசுத்தபு னத்துளபத்தாம
முடைகமழிடைமகள் கட்டவொடுக்கிய சிற்றுதரத்தர்ம

குருகுகடலையரு வித்துயில்வெற்பிறை கொட்டுகசப்பாணி
குளிர்மதிதவழ்பொழில் சுற்றியவெற்பிறை கொட்டுகசப்பாணி. (௩)

திருமகடழுவிய பச்சையுடற்புற முத்தவெயர்ப்பேறத்
திரைதருமமுதென வூற்றிதழிற்றுளி சுற்றுதரத்தாரக்

கருகியசுரிகுழ லுச்சிமுடிப்பிணி விட்டுமுகத்தாடக்
கதிரிளவெயிலெழு முச்சியிலைச்சிய சுட்டிநுதற்றூழப்

பெருகிளநிலவுமிழ் கொத்துவளைக்குல மிட்டபுயத்தாலப்
பிணிநெகிழ்நறைபிழி செக்கமலத்துணை யுட்கைசெவப்பூறக்

குரைமதுவொழுகு தொடைத்துளபப்புயல் கொட்டுகசப்பாணி
குளிர்மதிதவழ்பொழில் சுற்றியவெற்பிறை கொட்டுகசப்பாணி. (௪)

வேறு.

இடைதடுமாறக் குழல்புறமலைய மெய்ப்பூணொலிப்பவொலியா
இருகுழையூசற் றொழில்வரநிலவு முத்தாரமொப்பமுலைமேல்

முடைகமழ்தாழிப் புறமெறிதிவலை தொத்தாவெளுப்பமதிபோல்
முகம்வியர்வாடக் கயிறுடல்வரியு மத்தாலுழக்கியுறைபால்

கடையுமசோதைக் கருள்வரவிழிகள் பொத்தாமயக்கியுடனே
கரமலர்கோலித் தடவினிவிழுது தொட்டோடுபச்சைமுகிலே

தடமலிசோலைத் திருமலையழகா சப்பாணிகொட்டியருளே
தழையவிழ்தாமத் துளவணியழகா சப்பாணிகொட்டியருளே. (௫)

வேறு.

வாராட்டு கொங்கைக் குறுங்கண் டிறந்தூறி
வழியுமின் பாலருத்த
மலர்விழிக் கஞ்சனங் குவளையெழில் படவெழுத
வரிகுழற் புழுகுபெய்ய
நீராட்ட மஞ்சட் பசும்பொற் பொடித்திமிர
நிரைவளை கரந்தொடுப்ப
நிலவொழுகு* வெண்ணீறு பிறைநுதல் விரிப்பவெயி
னிழன்மணித் தொட்டிலாட்டிப்
பாராட்ட வெவருமற் றண்டகோ ளகைவிண்டு
பாய்பெரும் புனலிலாலம்
பாசிலைப் பள்ளியிற் றுயில்பசுங் குழவியேழ்
பாட்டளி சிறைக்காற்றினால்
தாராட்ட வண்டுளவு தேனொழுகு மணிமார்ப
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (சு)

பாட்டா யிரஞ்சுரும் பறைபொழிற் புதுவையிற்
பாவைகுழல் சூடியுதறும்
பனிமலர்ச் சருகுதே டிக்குப்பை நாடொறும்
பயிலாம லவள்புனைந்த
தோட்டா ரிதழ்ச்செவ்வி மாலைதரு வேமணிச்
சூட்டரா வணைசுருட்டிச்
சொற்றமிழ்ப் பின்புசெல் லாமல்வண் டமிழ்மாலை
சூட்டுபதின் மரையழைப்பேம்
கோட்டா வெருத்துகட் குடிலில்வெண் ணெய்க்கிளங்
கோவிமார் கன்றுகட்டும்
குறுங்கயிற் றணையுண்டு நில்லாம லாயிரங்
குடவெண்ணெய் கொள்ளையிடுவேம்

---

* வெண்ணீறு - புழுதிக்காப்பு. இது "சீரார்செழும்புழுதிக்காப்பு" என்று தமிழ்மறைநுதலியது.

தாட்டாமரை வேலித் தடஞ்சோலை மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (எ)

பூக்கும் பொலன்று மரைத்தாளின் மூன்பொத்து
புலியடங் கலுமுந்தியின்
புடைவைத்த தொப்பல வழைக்கைக் கெனப்பழம்
புனிதமறை யாளனூட்டத்

தேக்குந் திரைக்கங்கை நீராடு தண்டையுஞ்
சீறடி யெடுத்துமழலைச்
செய்யவா யிதழ்பெரு விரற்றலை சுவைத்துவெண்
டெண்ணிலா மூரல்கான்று

கோக்குந் தழைக்கூரை முடையாடை யிற்றுயிற்
கொண்டமுகி லுழவரோட்டும்
கூனுட லலம்பாய வெளிதாவு பகுவாய்க்
குறுங்கண்ண வாளைவாலால்

தாக்குண்ட சூன்மேகம் விழிதுஞ்சு மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (அ)

திங்கட் புகுந்துபெற் றுவகைமலி தாய்தந்தை
தீஞ்சுவைச் சோறளிப்போர்
செங்கதிர்ப் பொன்கொடுத் துத்தொண்டு கொண்டவர்
செழும்புகைப் படலைவானில்

பொங்கக் கிளைத்தெழு கடுந்தழ னெடுங்குப்பை
புயலுரு முடன்பகைத்துப்
பொருகுரற் பகுவாய ஞமலிநள் ளிருளுடற்
பொசிகழுதி கடையுருட்டு

வெங்கட் குறுங்கூ னரிக்கொள்ளை குடவளி
விரைந்தெடுத் தெழவிறைக்கும்
விரிசிறைப் புட்குல மெடுக்கெமக் கென்னுமுடன்
மீளவு மெடாமலடியார்

தங்கட்கி னருள்சுரந் தெழுபிறப் படருமுகில்
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௯)

எட்டுவகை யோகத் தினிற்பிரம ரந்திர
மெழுந்தங்கி யங்கடவுளுள்
ஈரைந்தொ டைந்துவெண் ணிறவைகல் வடவயன
மீரிரண் டோடிரண்டு

பட்டுவளர் திங்கள்வரு டம்பவனனுதவன்
பணிமதி தடித்துவருணன்
பாகசா தனன்மறைக் கடவுள்வழி காட்டநீர்
பாய்ந்தாடு விரசைபுக்கு

விட்டுழு துடலமா னன்றீண்ட வாதனையும்
விட்டழிவின் மெய்படைத்து
வெண்சங்கு மாழியுங் கைக்கொண்டு பரமபத
மேவுநின் றொண்டர்மீளல்

தட்டுமணி மண்டபத் துடனுறைய வைக்குமுகில்
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௰)

அகையுற துணர்த்தழைக் குடிலிருந் தந்தணர்க
ளரியகட வுளரைவேள்வி
அவியமுது கொள்ளப் பழம்பாடன் மறைகொண்
டழைக்குங் குரற்கற்றுநாள்

முகையுண்டு வண்டறை பொதும்பரி னிளங்கிள்ளை
முகமலர்ந் தெழுவிளிப்ப
மும்மையு முலகமும் பாழ்படத் தேவரும்
முனிவரும் வந்துபம்பிப்
புகையுந் தழற்குழியும் யூபமுஞ் சாலையும்
பொரியிடுங் கலனுநெய்வான்
பொங்கிவழி குழிசியுங் காணும லமரும்
புணரியெழு மிரவிபொற்றேர்
தகையுந் தடங்குடுமி யிடபநெடு மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௰௧)

சப்பாணிப்பருவ முற்றும்.

~3553
(௯144)
DR. U. V. S. IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA
BESANT NAGAR. MADRAS-90

---

## ஐந்தாவது
# முத்தப்பருவம்.

---

முருகொழுகிருவி னறவுகுநிபாய மழைவறுத்தகவட்டகில்
முருடுசுடுவாச மெழுபுகைவியாம வுடல்புதைப்பமதுத்துளி
முகிழ்நெகிழ்சாதி மலர்குளவிமூடு புதலருக்குபுனத்திடை
முகடுபுதைபூழி யெழவெயினர்மூரி யெருதுறப்பிவிடப்புனம்

அரவரசுசூடு குருமணிநிகாய மெனவுடைப்பமுகக்கொழு
அயின்முழுகுகூன லுதியின்மணியேற வலனுழைத்துமுழுத்திடா
அவல்வயிறுதூர நிரவிமுளைநாறு விதைபிடித்துவிதைத்திள
அளிவிளரிபாடு மடைபொதுள்படர முதநறித்துவணக்கிய

கரியகுரலேனல் புரவுபெறவேலி புறனிரைத்துநிரைக்கிளி
கடிகவணிலேன மிரியமணியார மெறியமத்தவிபக்கிளை
கதழெரியலாத மெனவெருவியோட விழைபுனிற்றுமடப்பிடி
கயமுனியைநாடி நடையையெதிர்மீள வரவொருத்தல்குழித்தலை

சரிகரையையோடி யுயர்கரையிலேற விடவழுத்துகுறத்தியர்
தமதுகுலம்வாழ வுனதுபுகழ்பாடி மடையளிப்பமதிக்குறை
தவளவளமேவு மிடபமலைவாண தவளமுத்தமளிக்கவே
தபனவெயிலேறு பவளவிதழூறு தவளமுத்தமளிக்கவே. (க)

வேறு.

வருமதபொருப்பு நடுவளைமருப்பு வயிறுதருமுத்த
மொளிகளைத்த பழுப்புறும்
வரைமுளியமுற்று மனலெழுவனத்து வளரும்வெதிர்முத்த
முடல்கொதிப்ப வெதுப்பெழும்
வரியளியிசைக்கு மனமுருகிமொட்டு மலர்வனசமுத்த
நிலவுசெக்கர் முகத்தெழும்
மகிணர்கரமுற்ற கலவியிலிறுக்கு மகளிர்களமுத்த
முருளுமுச்சி யதுக்குணும்

உருகெழவெளுத்த பிறைபுரையெயிற்ற வுரகமணிமுத்தம்
விடவழற்பொடி பட்டிடும்
உலகுடலிருட்டு முகிறுளிதுவற்ற வுடனெழுகுமுத்த
மொழுகிருட்டொளி யுட்படும்
உடைதிரையுடைப்ப வுவரிவிளையிப்பி யுமிழுமணிமுத்த
நெடியவெக்கர் மணற்படும
ஒழுகமடைபட்ட மதுமடலுடைக்கு முயர்கமுகமுத்த
மரகதத்த பசுப்பெழும்

வெருவிவலைகட்ட வணவியலைதத்தி விழுசுறவமுத்த
மயிலுதித்தலை முட்படும்
மிடறொலியெடுப்ப வெழும்வளியுலர்த்த வெளியவளைமுத்த
மறவெறித்தெழு நெய்ப்பறும்
விளைகழனிநெற்கண் விரவுபருமுத்த முலவியவெருத்த
கவையடிப்பட விட்புணும்
விரிகதிர்பரப்ப விலைதழையுமிக்கு விளையுமுழுமுத்த
முரலரைப்ப விழைப்புணும்

இருநிலமடுத்து முகமுழுகளிற்றி னெயிறுசொரிமுத்த
முறுபாற்க ணுறப்புறும்
இவைதவிர முத்த மணிசிலவிரட்டை படுமொளிமறுக்கு
மெனவனைத்து முவக்கிலெம்
எறிபுனலுடுத்த தலையருவிசூற்று மிடபநெடுவெற்ப
விதழின்முத்த மளிக்கவே
இளமதியொழுக்கு மமுதருவிசூற்று மிடபநெடுவெற்ப
விதழின்முத்த மளிக்கவே. (உ)

வேறு.

உலவைகரிவெப்பு வனமடைகுழைப்ப வெதிரிசையழைத்தும்விடவாய்
உரகனைவரித்த கொடிநிருபனுட்க வரிவளைகுறித்துமுரிதோய்

கலனுதரமெத்த விடைமகளிர்வைத்த முடையளைகுடித்துமவர்தாழ்
கயிறரையிறுக்கி யுரலுடனணைப்ப வழுதிதழ்நெளித்துமனையாம்

அலகையுயிரொக்க வமுதொடுகுடிப்ப முலைதலைசுவைத்துமெறிநீர்
அலைசலதிவட்ட மகிதரைமடுத்து மகவிதழ்செவத்ததுவர்வாய்

மலரெமர்பொருட்டு மொருமுறைசெவப்ப மழலைமணிமுத்தமருளே
மதியமுதொழுக்கு மிடபநெடுவெற்ப மழலைமணிமுத்தமருளே.

வேறு.

ஆகத்து ணீங்கியுயிர் யாதனை யுடற்புக்
கனற்புகை யிருண்டகங்குல்
ஆரிருட் பக்கமறு திங்கடொற் கயனநில
வலர்திங்கள் வழிகாட்டமீ

மாகத்து நரகம் புகிஇப்பயன் றுய்த்தொழியும்
வழிநாளி லந்தவுருவம்
மாயமுறு தாவியொடு தபனகிர ணத்திமைய
வரையிமத் துடனடைந்து

மேகத் துவந்துகும் பெயலினிற் பாரிடன்
வீழ்ந்துநளி புனலோடுநா
விழையும் பொருட்டொறு மணைந்துபல் லுடன்றுறும்
மேவியிங் ஙனமளவினுள்

போகத் திரிந்துவர விளையாடல் புரியுமுகில்
பூங்குமுத முத்தமருளே
பொறிவண்டு கண்படுக் குஞ்சோலைசூழும்
பொருப்பமணி முத்தமருளே. (௪)

ஈட்டும் பெருந்தவ முனிப்புனித னென்புடல
மிரலையுட லதனுடுப்ப
வெரிவிழிப் பிணருடற் பிலவாய் நெடும்பே
யிபத்தோ லுடுப்பமுனிவன்

மூட்டுந் தழற்குழியி னெய்சொரிய நரியுதர
மூளெரிக் குழியிலுடலம்
முழுகுநிண நெய்விடத் தவமுனி தருப்பையடி
முறைபடுப் பக்குடற்கோத்

தாட்டுஞ் சிறைப்பருந் தடிபடுப் பத்தவத்
தரியமுனி கடவுள்யாவும்
அழைப்பவெங் காகங் கரைந்தின மழைப்பமுனி
யனன்மகங் காத்தெடுப்பக்

கோட்டுஞ் சிலைக்கணையி னிருதரைக் காய்ந்தமுகில்
குழைபவள முத்தமருளே
கூராழி கைக்கொண்ட வாயிரம் பேராள
குழைபவள முத்தமருளே. (௫)

வரையெடுத் தேழுநா ணின்றநீ கோபால
மகளிர்சிறு சோற்றினுக்கு
மடிமண லெடுத்ததா லுடலிளைத் தும்வானின்
மந்தார மலர்கொய்தநீ

விரையெடுத் தெறிபூங் கறிக்குமல ரொட்டாமல்
விரல்குந்தி யடிகன்றியும்
வேழவெண் கோட்டைப் பிடுங்குநீ வண்டன்மனை
விளையாடு பாவைக்குவெண்

திரையெடுத் தெறிபுனற் காய்பிடுங் கிக்கரஞ்
சேந்துமுன் னொந்தவென்று
செய்கின்ற மாயங்க ளறிகிலேங் குறமகளிர்
செங்கணிழல் குருகுநோக்கி
இரையெடுத் தல்லாமை யாலழிப் மருவிமலை
யிறைறவமணி முத்தமருளே
யெற்றுந் திரைச்சிலம் பாறுசூ ழிடபகிரி
யிறைறவமணி முத்தமருளே. (சு)

மட்பாவை தோயுந் துழாய்ப்பள்ளி யந்தாம
மார்பின்கண் வாய்த்தவந்த
மதியத்து மார்பினு மிருந்தா னெனப்பருதி
வருபுலத் தொருநான்குதோட்
புட்பாக னும்மறலி யுறைபுலம் வெண்ணிறப்
புனிதனும் வருணராசன்
புலத்தினிற் பச்சுடற் றேவும்வெள் ளிதழ்நறும்
பூங்குமுத பதிபுலத்தில்
கட்பா சடைப்பற் பராகவொளி கான்றமெய்க்
கடவுளு முடன்விதிக்கில்
காவல்பூண் செயமங்கை பூதம்வெம் புலிகொடுங்
கணைகுரற் சீயம்நிற்ப
விட்பால் வருந்திங்க ளுருவுகொள் விமானத்தின்
மேவுமுகின் முத்தமருளே
வெண்ணிலா மதிதுஞ்சு தண்ணிலா வாராம
வெற்பமணி முத்தமருளே. (எ)

வேறு

படைத்துத் திருவைத் தருந்தேவர்
பாக சாலை சுட்டிலங்கைப்
பாடி தொலைத்துக் கரும்பேய்க்குப்
பாக சாலை யளித்தறத்தைப்

புடைத்துத் தருக்கு மரக்கர்குழுப்
போக நரக வழிதிறந்து
புலவுச் சுடர்வெம் மழுப்படைக்கைப்
புனிதன் போக நரகவழி

அடைத்து முதன்மை முறைமாற்றி
யடைவு கெடுக்குந் தனிப்பகழி
ஆடற் சிலையி னுண்கொழிக்கு
மழுக்குப் போகக் கொடிவிசும்பைத்

துடைத்துத் திவளு மலைபிறைவ
துவர்வாய் முத்த மளித்தருளே
தோணுன் கைந்து படைநமக்குந்
தோன்றன் முத்த மளித்தருளே. (அ)

வேறு

தாள்பற்றி யேத்தப் புரந்தரன் கரிமுகன்
சதுமுகப் பதுமயோனி
தண்ணறுஞ் செச்சையந் தார்முருக னிமையவர்
தடஞ்சுருக் கொடியுயர்க்கும்

வேள்பற்று தீயிற் குளிப்பநுத ளுப்பண்
விழித்தகட் சூலிசெம்பொன்
வெயின்முடிச் சேனைநா தன்பிரம் படிதாக்க
மீதிலெழு மணிகடொத்திக்

கோள்பற்று வடபுலக் குன்றெனப் பத்துமுன்
கொண்டவெண் படிமணந்த
கொண்டறுஞ் செழுநிலத் திருவாசல் பொலிநங்கள்
குன்றின் றுழாய்ப்படப்பைத்

தோள்பற்று சுந்தரத் தோகையொடு வாழுமுகி
றுகிரில்விளை முத்தமருளே
தொடுகடல் வெதுப்பவொரு சிலைகடை குழைத்தவன்
றுகிரில்விளை முத்தமருளே. (௯)

சேடற் கெருத்துளுக் கக்கடற் பள்ளத்
திரைத்தலை வரைத்தலையினைத்
தெசமுகக் கபடனை வெருண்டெழும் வானரச்
சேனை பராகமண்ட

கூடத் தெழுந்துவான் கங்கைக்கு மண்கட்டு
கூலம் பசுந்தகட்டுக்
கொய்துணர்த் தருவினுக் காலவா லஞ்சங்கு
கொட்டுமா னதவாவியில்

பாடற் சுரும்பூது முவரிநெடு நாளமுதல்
பதிகொள்ள வள்ளறெய்வப்
பாவையரை யமரர்புரி வதுவைக்கு முளைநாறு
பாலிகைப் பூழியாக

ஆடற் கருஞ்சிலையி னிருகடை குனித்தவன்
னம்பவள முத்தமருளே
அருள்பெருகி யலையெறியு மரவிந்த லோசனன்
னம்பவள முத்தமருளே. (௰)

உடைக்குந் திரைக்கொ ளராவணைத் துயில்கொளு
முனைக்கடு தொடற்கஞ்சியே
ஒழுகுமளை முடைநாறு மணையாடை பலகாலு
முதறிப் படுத்துமீளப்

படைக்கும் பெரும்புவன மீரேழு முண்டநின்
பண்டிக்கு முலைகுடிக்கும்
பால்செறித் தற்குப் பசும்பரைத் தூட்டியும்
பைம்பொற் பொருப்புநீறுப்

புடைக்குஞ் சிறைப்புட்க டாய்வரு முனக்குமொரு
புட்டோடம் வந்ததென் று
புனல்சொரிந் தும்பொதுவர் மங்கையர் மயக்குறப்
பொதுவினின் மயக்கியிழிவைத்

துடைக்குந் துணர்ச்சோலை யிடபகிரி நின்றமுகில்
துகிரில்விளை முத்தமருளே
தொடுகடல் வெதுப்பவொரு சிலைகடை குழைத்தவன்
துகிரில்விளை முத்தமருளே. (௰௧)

முத்தப்பருவமுற்றும்.

ஆறாவது

# வாராவணப்பருவம்.

மடலவிழ்பொழின்முதன்மேற்பட நிமிர்தலைகவிழ்ந்து
பார்பூப்பவெறியுமகில்சுடு
மணமெழுபுனம்விளைகாய்த்தினை கவரமழகன்று
நாநீட்டவகவியலம்வரும்
மடமயிலுகள்விடையேற்றிமி னெடுமுகடிருந்து
தாள்பேர்ப்பவிளையகுறவர்தம்
மடவியர்விழுகிளியோச்சிய விதண்முதல்பறிந்து
கீழ்நாற்றநடுவெதுறுமிய

விடரகம்வெறுவயிறுய்ப்பெரு வெளிபடமுழங்கு
கோளேற்றைறயுழுவையரிவிழ
விரிபொறியவிர்தலைதூக்கர வருணமணிதுன்று
வாய்காற்றவிருளுமுகமுசு
வெளியினில்விழுசிறுபார்ப்பினை விசையுறவெழுந்து
தாயேற்பவமுதநதிபடி
விடுமடிநிரைகடைவாய்ப்புற* மிசையுறுபசும்பு
லீயோட்டவெயினர்தறியணை

கடகரிகுனியிருகோட்டிள நுதியுழவிழுந்து
கார்காட்டவயிரம்வெயில்விடு
கதிர்மணிமரகதமீர்த்திழி யருவிகள்பரந்து
வீழ்நாட்டவெறியும்வளிதரு
கருகியசிறுசிறைறயீக்கண மலமறவழிந்தி
ரூறூற்றுநறவம்விழவிரு
கலைதவழ்மறிதிரையாட்டிய புனல்சுனைமறிந்து
வாய்சாய்ப்பநறியகுவளைகள்

(அசைபிடு, பி-ம்.)

புடைவிடுமிடன்மதிலூற்றெழ வகன்மழைபொழிந்து
    நீராட்டமகரமலையொடு
பொருகடல்கவர்புயலீட்டிய புறன்மழைதடிந்து
    தோடேழ்த்தமுளரிநடுவுயர்
பொகுடெனவரையெழுநாட்பொழு தொருசிறுபசுங்கை
    மீதேறறகுரிசில்வருகவே
புகர்முகமதமலையூற்றுவர் கெடவிசயனின்ற
    தேரோட்டுமழகன்வருகவே. (௧)

வேறு

முடையுறிபொறுத்த சுவலினர்வெருநதத நறியதளவிள
முகையெனு*மெயிற்றின் வழுவிரவுகொசசை யுடையமொழியினர்
முடலைபடுநெட்டை யுடலினரழுக்கு முறுகுமறுவையர்
முருகொழுகுவெட்சி யிதழிநறைறகக்கு பிடவமதுமலர்

இடைவிரவியிட்ட குழையினர்குலத்தின் முதன்மையறன்வழி
எமதுமகள்சுற்க மிதுவெனவிநிப்ப முதலுமொருபகல்
இமின்முகடசைத்து விழியெரிபரப்பி யுதறியுடலினை
இடியெதிர்சிலைத்து நிமிர்செவிகுவித்து நெடியகவைபடும்

அடிகொடுதுகைத்த துகள்வெளிபாபபி யறவியறுமுகன்
அயிலொருபுறத்து மழுவொருபுறத்து முறையிலிருபுறம்
அலைவறவிருத்தி வடிபுரிபருப்பின் வயிர நுதியினின்
அறுபதினிரட்டி யிடையாகள்புயத்து முரணும்விடையெழு

தொடைமணியெருதத நெரிபடவுழக்கி யருணமணிபொதி
றவெறிமழைக்க ணிடைமகள்களித்து மகிழவடமிடு
துணைமுலையுழக்க வதுவைசெய்புயத்தி னழகன்வருகவே
துணர்சினைவிரித்த பொழில்வளர்பொருப்பி னழகன்வருகவே. (௨)

வேறு

மணிபொதியுமோலி புனையுமுடிதாழ விழுதுவிட்டவிர்சடைமுடி
வனையவொளிர்பீத வுடையினையுடாது திருவரைப்புறன்மரவுரி

* (மெயிற்றா பிம)

அணியமலர்மாது கரம்வருடநாணி யுடல்சிறுப்பெழுமலர்புரை
அடிகருகவான மழைபருவமாறு மயிலுதிப்பாலடவியின்

உணர்வுவறிதாய வறம்வழுவும்வாய்மை யுடையசிற்றவைவிடைதர
உவகையொடுபோன வருமயிலைநாளு முலையுளித்துணதருள்பெறும்

பணிவிடைசெய்தாய ரெமதுரைமறுது பழமறைப்பொருள்வருகவே
பருவமழையாடு குடுமிமலைமேவு பழமறைப்பொருள்வருகவே. (௩)

வேறு

வினைபுரியுங் கடியவிடப மழல்கடை
விழியுதறுங் கொடியகுருகு வெளியுழ
சினையிணர்பும் புடபமருது புடையுருள்
திகிரிதொடும் பரியசகடு முலைதர
அனையெனவந் தடருமலகை யிலைவயிலை
யவுணன்விடும் பணியில்வருமுன் விரைவினில்
நனைபொதியுந் துளவனழகன் வருகவே
நமதுபுறந் தழுவவழகன் வருகவே. (௪)

தடவமுதம் புகையின் முழுகு மனைமுலை
தறிபயில்கன் றலகு செருகு நிரையுடன்
அடவிபுகும் பொதுவன்வருவ னவனுடன்
அறியவிருந் துவகைபொழியு மழன்முகம்
இடுமிழுதின் பதமுமுறுகு மிலைமனை
யிடைதமியன் புகுமுன்முலையி லமுதுண
மடல்பொதுளுந் துளவவழகன் வருகவே
மறைகதறுங் கடவுளழகன் வருகவே. (௫)

இணைவிழியும் பொலிவுவரவு மடியர்தம்
எழிலுடலம் புளகம்வரவு முகபடம்
மணிமுலைபொங் கமுதம்வரவு நிறைமதி
வதனமலர்ந் துவகைவரவு முனதரை
அணிமணிபம் பரவம்வரவு மொருமுறை
அடியிணைநொந் தருணம்வரவு முயர்கண
பணவுரகசு துயிலுமழகன் வருகவே
பழமறையின் கடவுளழகன் வருகவே. (௬)

எமதுகருங் குழிசியமுத முறைதயிர்
எமதுபொலன் குயிலெமரிய குழமகன்
எமதிடமெண் புனையுமணிய டிசில்கறி
எமதெறிபங் திழுதுமுறையி னிறைதுகில்
எமதுகழங் குனதுமதலை திருடினன்
எனவெவரும் பொதுவர்மகளிர் குழுமினர்
அமையுமிடங் கலகமழகன் வருகவே
அமலைபழங் கொழுநனழகன் வருகவே. (எ)

வேறு

திருநாட்டு வங்தெவரு மருள்பெறற் கரிதெனத்
தெண்டிரைப் பாற்கடற்கட்
டெய்வநா கணையினிற் றுயில்கொண்டு மீன்முதற்
றிருவுருப் பத்தெடுத்தும்

பெருநாட் டுளங்குநீ ருலகிற் படாதன
பிறந்துபட் டுங்குருதிநீர்
பெய்யும் புலாற்கூட்டை யிழிவெனு தனுவொளி
பிறங்கவுட் டாமரைப்பால்

உருநாட்டி யும்நமது பேரூர் மறந்தானு
மொருகா லுரைப்பர்கொலெனு
உபயகா வேரிநீ ராற்றினும் வேங்கடத்
துச்சியினு மடியர்தங்கள்

கருநாட்ட மறவிடப மலைமீது நின்றருக்
கருணைபொழி முகில்வருகவே
கங்கையுங் தொல்லைப் பழம்பாடன் மறையுங்
கறங்குதாண் முகில்வருகவே. (அ)

தொழக்களி வருங்தொண்டர் பாசவெம் புரசைசுவல்
சூழவைம் புலனடக்கும்
தோட்டிவென் றெழுமதம் பயின்மனக் கரிநிரை
தொடர்ந்துசிற் றடியைமுற்ற

மழக்களிற் றினமும் புனிற்றிளம் பிடிகளும்
வழியருவி யோதைவீங்க
மலைழமதந் தூங்குங் கவுட்கரி யொருத்தலும்
வந்தரு குலாவவிண்ட

பழக்களித் தீஞ்சுளைப் பலவுசொரி தேனாறு
பாயுஞ் சிலம்பாற்றயற்
பாசடைத் தாமரைப் பள்ளநீ ரள்ளலிற்
பாயுமேற் றெருமையேய்ப்ப

உழக்களிப் பூந்துணர்ச் சினையபுத் திரதீப
முறையுமா ளரிவருகவே
உபயசர ணம்பரவு மடியருக் கிருவினை
யொழிக்குமழை முகில்வருகவே. (கூ)

வேறு

தளவு காட்டும் வெண்முறுவ
றவழுந் துவர்வா யசோதைபச்சைத்
தழைக்கூ ரையினின் முடைப்பகுவாய்த்
தடவுத் தாழி நெட்டுறியின்

அளவு காட்ட நிமிர்ந்துவெண்ணெ
யருந்து மளவி லவளறிகண்
டடிக்குந் தாம்புக் கஞ்சியழு
தரையி லார்க்கு மணிபொத்தித்

துளவு காட்டுந் திருமேனி
துவளத் திருத்தாண் முன்செல்லத்
துணைக்கட் கமலம் பின்கிடப்பத்
துண்ணென் றோடுஞ் சிறுவாவுன்

களவு காட்டே மெம்பிரண்டு
கண்ணுங் களிக்க வருகவே
கருணை சுரந்து மடைதிறந்த
கண்ணா வருக வருகவே. (ய)

வேறு

கோட்டிற் பகுத்தமதி வைத்தனைய குறுநுதற்
கோற்றொடி யசோதைவாழைங்
குறங்கிற் குடங்கையி னெடுத்தணைத் துச்சிறிய
கொடிபட்ட நுண்மருங்குல்

வாட்டிப் பணைத்தமுதா சூற்கொண்டு வெச்சென்று
வனைமுலைக் கண்டிறந்து
வழியுமின் பான்முதற் றரையூற்றி வெண்சங்கு
வார்த்துவா யிதழதுக்கி

ஊட்டித் தலைப்புறஞ் சங்குமும் முறைசுற்றி
யொருமுறை நிலங்கவிழ்த்தி
உடலங் குலுக்கிப் பசும்பொடி நிமிர்ந்துதிரை
யூடெற்று தண்டுளிநனீர்

ஆட்டிப் பொலன்றொட்டின் மீதுவைத் தாட்டவள
ராயர்குல முதல்வருகவே
அருள்பெருகி யலையெறியு மரவிந்த லோசனன்
னழகன்மா தவன்வருகவே. (௯௧)

வாரானைப்பருவ முற்றும்.

---

## ஏழாவது
# அம்புலிப்பருவம்.

விடங்கலு ழெயிற்றரா வாலிலைப் பள்ளியுள்
விழித்துணை முகிழ்த்தடங்கா
வெளிமூடு வெள்ளத்து மலர்மண்ட பத்தயனும்
வேதமுங் கடவுணதியும்

கடங்கலுழ் புழைக்கரக் களிறெட்டு மெட்டுக்
களிற்றுப் பெரும்பாகரும்
காளகூ டக்களத் திறைவர்பதி னொருவருங்
கதிரவர்கள் பன்னிருவரும்

மடங்கலும் வெண்டிரையும் வெண்டிரை வளாகமும்
வானுமெறி வளியுமனலும்
மன்னுயிர்ப் பன்மையும் வகுத்தளித் துப்பின்னர்
மாய்க்கும் மயக்கவிளையாட்

டடங்கலு மொழிந்துன்கண் விளையாடல் கருதினு
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (க)

பொங்குவா னுளையேழு பரிமாத் தொடக்குபொற்
றேருகைத் திருளொதுங்கப்
பொழிகதிர்த் தபனமண் டலமூ டறுத்துநீ
போதுதற் குண்மயங்கில்

வெங்கண்மால் கூரலை கருங்கடற் குண்டுநீர்
விரிதிரை யிலங்கைமூதூர்
விட்டுப் பெருங்கிளைக் குழுவொடும் பொருசேனை
வெள்ளத்தி னொடுநிறைந்த

திங்களுண் மாலைவெண் குடையவுணன் வானமீச்
செல்லவத் தபனனுகம்
திறந்தெழும் பெருநடவை யூடிழிந் தின்றுநீ
சேணொடு விசும்புகைவிட்

டங்கண்மா நிலமுந்தி பூத்தவன் றன்னுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (உ)

மூளைக்குங் கலாநிலா வமுதநிறை மண்டலம்
முழுகுதர மறைகிடக்கும்
முடக்கும் பகட்டுட னிமிர்ந்துவெம் புகையரா
முள்ளெயிறு நட்டழுத்தித்

தொளைக்கும் பெரும்பாழி வாய்கக்கு நஞ்சினித்
துண்டப் படைக்கொடிப்புட்
டேவியஞ் சேவற் கிரிந்துபோ மயிர்பொறித்
துள்ளுமான் பிள்ளைமற்றோள்

வளைக்குங் கருங்கார் முகங்கண் டெழத்தாவும்
வல்லிருட் பொசிவானின்வாய்
வட்டவா ழிப்படை வெயிற்பட வொதுங்குமேழ்
மண்ணுக்கு மத்துழக்கும்

அளைக்குந் திருப்பவள மங்காக்கு மானுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (ரு)

வளிநான்ற மணிமுறத் தழைமசெவிச் சிறுகவுளில்
வண்டோ டிரண்டுபாடும்
மழைபாய் கடாக்கரிக் கண்கொடுத் தும்பச்சை
மரகதத் துச்சிபூத்த

ஒளிநான்ற நற்படிவ ம...யப் பெருந்துவச
னுட்களிப் புறவளித்தும
ஒருஞான்று பேரடிசில் வாய்மடுப் பச்செம்பொ
னுடைநெகிழ்த் தும்மலைத்தேன்

துளிநான்ற வாலவாய் வேப்பிணர்த் தென்னர்முன்
றொடைநறுங் குழல்விரித்தும்
தொல்லைநாள் செய்தவையி னரியதன் றேயிருட்
டோய்ந்தநின் மறுவொழித்தல்

அளிநான்ற பூந்துழாய் மணிமார்ப னிவனுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (சு)

கறைபட்ட முக்கவைச் சூலவே லெறிபடைக்
கடவுள்சடி லத்திருந்து
கண்டத்தி னூற்றெழு விடத்தா னுணங்கியுங்
கங்கைப் பெருக்கெடுத்துத்

துறைபட்ட வெண்டலைத் திரையினடு வுடலந்
துளங்கியுந் நுதல்கிழித்துத்
தூற்றுங் கடுந்தழற் சூடுண்டும் வளைபிறைத்
தொளையெயிற் றரவுகண்டும்

குறைபட்ட வட்டவுட னிறையா திருந்துங்
கொதிக்கும் வெதுப்புமாறக்
கொய்துழாய்ச் சோலைநிழல் குடிபுக்கு வாழலாங்
கோதிலா வேதநான்கும்

அறைபட்ட தாட்கமல மலையலங் காரனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (௫)

கோலுந் திரைப்புணரி யுதரத்தி னுடன்வந்த
கொத்தளிப் பத்திலக்கம்
குடைந்தாடு பொற்றருக் கிளைகிளர் படப்பைசெங்
கொள்ளைவெயில் புடைததும்பக்

காலுங் கதிர்க்கடவுண் மணிவண்டல் படுகலவை
கமழு*மணி மார்பிலாரம்
கள்ளுடைத் தொழுகங்க மடல்விண்ட பைந்துளவு
கடிமலர்த் தாமம்வேலும்

சேலுங் கெடுத்தவிழி மலர்மண்ட பந்தருந்
திருமாது தேவிவெள்ளைத்
தெண்ணிலா வுமிழ்கின்ற நீயுமிவன் மைத்துனன்
சினைவரா லுகளவெகினம்

---

*வரை (பி-ம்)

ஆலும் புனற்சிலம் பாற்றலங் காரனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே. (சு)

உடைதிரைக் கடன்முளைத் துலகுவலம் வருமொற்றை
யுருள்பெருந் திகிரியிரவி
யுடனுறையி னென்றவன வொளிமாழ்கு மிளநறவ
முமிழுமடல் விண்டதுளபத்

தொடைகமழ் திருப்புயத் தாயிரந் தேரிரவி
சொரிகதிர்க் குப்பைகக்கித்
தூற்றுஞ் சுடர்ப்பாழி யாழியெதிர் யான்வரத்
துணியுமா றெங்ஙனென்னில்

புடையுமிழு மாயிரம் மணிவெண் ணிலாக்கற்றை
பொங்குவெண் கதிருடுக்கும்
புரிமுகக் கடவுட் டனிச்சங்க முண்டுநீ
போதுதற் கஞ்சறகுவர்

அடையவிரி யச்சங்கம வாய்வைத்த வாயனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே. (எ)

மாலைவாய் நறவுபாய் கொந்தளச் சதிரிள
மடந்தையர் முகத்தையொத்து
மலைதல்கொண் டிடபகிரி யருகுவரி லீயீட்டி
வளரிரு லென்றழித்தும்

சூலைவாய் வளைகதறு நூபுர நதிப்புகிற்
றுவளுநுரை யென்றுடைத்தும்
சூழல்வாய் வரிவிளைய வெள்ளையம் புயமென்று
சூழ்ந்துகொய் துங்கிளிக்குப்

பாலைவாய் விடவெள்ளி வெண்கிண்ண மென்றுகைப்
பற்றியுங் கதிர்ததும்பப்
பார்க்கின்ற பேராடி யென்றெடுத் தும்பகை
விளைப்பரென் றஞ்சமுஞ்சா

ஆலைவா யொழுகுபா காறுபாய் மலையனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (௮)

காயுங் கடுங்கதிர் விரித்தொற்றை யாழியங்
கடவுளலை தலைபிளந்து
கனைகடற் பெருவயி றுதித்தெழக் கனியவிளை
கனியென்று புகவிழுங்கப்

பாயுங் கவிக்குலத் தொண்டர்நா யகனைநின்
பால்வர விடுப்பனன்றேற்
பாழிவா யங்காந்து கவ்வியிரு கவுளூட்
படுத்துக் குதட்டவாலம்

தோயும் பிறைப்பற் சுருட்டுடற் பாயல்வெஞ்
சூட்டரா விளைவிடுப்பன்
துளபத் தாணர்க்கண்ணி யெந்தைகீழ் நின்றுநாற்
சுருதிதொழு தாள்செவப்ப

ஆயுந் தமிழ்ச்சங்க மீதிருந் தானுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே. (௯)

துள்ளக் குறுந்திவலை வெள்ளிவெண் டிரையாடு
தொடுகடற் றலைதுயின்றும்
தொலைக்குங் கழைக்குழ லெடுத்திசை யெழுப்பியுந்
தொல்லைமா ஞாலமேழும்

கொள்ளப் பரந்துமறை மழலைவாய் நான்முகக்
குழவியைப் பெற்றெடுத்தும்
கொடியா டிலங்கையிற் பேயாட விற்கடை
குழைத்தும் பரந்துபூக்கும்

வெள்ளத் தடங்கமலம் யானருகு வரின்முருகு
விரிமுகங் குவியுமென்று
வெருவர லிவன்கரிய கடவுண்மே கத்துடலம்
விளைகமல வனமனஞ்சூழ்

அள்ளற் பெரும்பள்ளம் வந்ததன் றிவனுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே (௰)

விரியுங் கதிர்க்கற்றை யமுதூற நீவந்த
வேலைப் பெரும்பள்ளநீர்
வெஞ்சிலை குழைத்திவன் கணைதொட வறண்டது
விழைந்துநீ யரசுநாளும்

புரியும் பகட்டுவெளி யிவன்மலர்த் தாமரைப்
பொற்றூ ளொடுதைநீட்டப்
பொலனுடல் பிளந்தட விரவியொடு நீயரும்
புகலென்ன வடையும்வெற்பு

சொரியும் புயற்றலை தடுக்கைக்கி வன்னகரு
தொடவடி பறிந்ததிவனைத்
தொண்டையங் குதலைவாய் மதலையென் றெண்ணலஞ்
சூற்கமுகு வெண்பாளைவாய்

அரியும் பசுந்தே னரும்புமலை வாணனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே. (௰க)

அம்புலிப்பருவமுற்றும்.

## எட்டாவது

# சிற்றிற்பருவம்.

---

எட்டிற் பொறிச்செஞ் சுரும்பறுகால்
ஏறிய நறைபாய் செழுங்கமலத்
திறைவன் முதலா மிமையவர்கள்
இறைஞ்சு மௌலி யேந்துதலை

ஓட்டிற் பொறித்து வலஞ்சுழி
ஒருங்க வடிமை கொண்டதுபோல்
உனது மலர்த்தா ளுட்கிடக்கும்
ஒற்றைக் கடவுட் சங்குவண்டல்

வீட்டிற் பொறித்தின் றெங்களையும்
விழைந்தாட் கொள்ள நடந்ததிரு
விளையாட் டிதுநன் றன்றலைபாய்
வேலை யுதித்த திருவின் முலைக்

கோட்டிற் பொறித்த சுவடெழுதோட்
கொண்டல் சிற்றில் சிதையேலே
கொண்ட லுறங்குஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே. (க)

கொழித்துக் கிரணஞ் சொரிகழற்காற்
கோக னகத்தி லுறைகங்கை
குதித்துத் திரைநீர்ப் பெருக்கெடுத்துக்
கோட்டும் வண்டற் பாவையினை

அழித்துச் சமைத்த மலர்க்கறியை
அரித்துத் தூதைக் கலத்துமணல்
அடுஞ்சோ றெடுத்து மணிப்பந்தும்
ஆடுங் கழங்கு மம்மனையும்

சுழித்துப் பசும்பொற் குழமகவைச்
சுழியிற் படுத்துச் சிற்றடியேம்
துயர முறவே நடுவுடலம்
சுருட்டுங் கடவுட் பாம்பணையின்

விழித்துத் துயிலு முகின்முன்றின்
மிதித்துச் சிற்றில் சிதையேலே
விதுரன் மனைக்கு மிதிலைக்கும்
விருந்தன் சிற்றில் சிதையேலே. (உ)

வாழி யெடுத்து நிற்பரவு
மறைநான் கரற்று நான்குமுகன்
வடிவ மெடுத்துப் படைத்துநிறை
மதியங் கொழிக்கு நிலாவென்னப்

பூழி யெடுத்த திருமேனிப்
புலவுக் கவைவேன் மழுப்படைக்கைப்
புனித வுருக்கொண் டழித்துவலம்
புரியு முகச்சங் குடன்வட்ட

ஆழி யெடுத்த வுருவெடுத்தால்
அளித்துப் பயிலுந் திருவிளையாட்
டன்றி யழித்த லியல்பன்றே
அணக்குங் குடுமித் தலைத்துயில்கான்

கோழி யெழுப்புஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே
கொண்ட லுறங்குஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே. (ந)

இளைத்துத் துவளு மிடைமடவார்
எண்ணில் பதினா றுயிரவர்
இழைக்குங் குமத்தோ டமைநெருக்கி
இலவத் துவர்வா யமுதருந்தித்

திளைத்துக் கெஞ்சிப் பெரும்புலவி
திருத்தித் தேய்ந்தும் மகளிர்முலை
தீண்டி யறியே னென்றுபொய்யே
தேவர் தெளிய முன்னையுயிர்

முளைத்துத் தழைப்பக் கரிக்கட்டை
முதுகு மிதித்தாய் சிற்றடியேம்
முன்றிற் புறத்தி லெதுதெளிய
முளரித் தாளான் மிதிப்பதுதேன்

வளைத்துச் சுழிக்குந் துழாய்ப்புயல்யாம்
வருக்குஞ் சிற்றில் சிதையேலே
வானம் பிளக்குஞ் சோலைமலை
மன்னன் சிற்றில் சிதையேலே. (௪)

அலம்பாய் விளைநெற் பழனத்தில்
அள்ளன் மடுவிற் றுள்ளுகயல்
ஆடுந் தரங்கக் கருங்கழியில்
அறையுஞ் சிறகர்ப் பேட்டெகினக்

குலம்பாய் குவளைக் கோட்டகத்திற்
குண்டு சுனையிற் றொட்டநெடுங்
குளத்திற் குறுந்தாட் கருமேதிக்
குழியி லுனது பேர்யாணர்ச்

சிலம்பாற் றயலி லாயிரநீர்த்
தெய்வத் தடத்தி னன்றிமுன்றிற்
றெள்ளிப் பரப்பு மணற்குவையிற்
செக்கர்க் கமல மலராது

வலம்பாய் திகிரி முகின்மிதித்து
வளைக்குஞ் சிற்றில் சிதையேலே
வாரி மகட்கு நிலமகட்கும்
மன்னன் சிற்றில் சிதையேலே. (௫)

கோலவை மணிப்பந் தெறிந்தாடும்
கொடிபொற் கழங்கு புனல்வாவி
கொட்டுங் கிரணச் செய்குன்று
கொய்பூந் தளவப் பந்தல்வண்டற்

பாவை யுகைக்கும் பொன்னூசல்
பாரைக் குரவந் தேன்கொழிக்கும்
படப்பை குதிக்கு மான்கன்று
பசும்பொற் கிள்ளைப் பிள்ளையிளம்

பூவை யிவையுன் பதத்தூளி
பொதியப் பெருவீ டுறிலடியோம்
பொய்த லொழியு மலர்வனசப்
பொகுட்டி லிருக்கு நான்குமுகத்

தேவைத் திருவுந் தியிலளித்த
சிறுவன் சிற்றில் சிதையேலே
தெள்ளுந் தரங்கப் பாலாழிச்
சேர்ப்பன் சிற்றில் சிதையேலே. (௬)

வேறு

கொள்ளைநீர்க் குவளைக் கோட்டக மறந்தும்
குழந்தைவெண் மதிக்கோட்டுக்
குன்றொடுங் குயில்போற் கூவுதன் மறந்தும்
கூருகி ரிளங்கிள்ளைப்

பிள்ளையை மறந்து மயிலுட மறந்தும்
பேட்டிளம் புறவோடும்
பிணைபிணை மறந்தும் ஊசலை மறந்தும்
பிள்ளைவண் டிதழுந்தக்

கள்ளவா யொழுக்கும் வெள்ளிவெண் ணிலவு
காற்றிள முகைமுல்லைக்
கன்றினை மறந்து மிழைத்தயாம் வருந்தக்
கன்னியர் மனைவாயின்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS

வளையா லனங்கண் டுயின்மலைக் கிறைவன்
மணற்சிற்றில் சிதையேலே
வண்டமர் துளவன் மாலலங்காரன்
மணற்சிற்றில் சிதையேலே. (எ)

சுழித்தெறி தரங்கத் திருச்சிலம் பாற்றுத்
தூற்றிய திரை யீட்டும்
சொரிநிலாக் கிளைக்கும் வெண்மணற் குப்பைச்
சுடர்பொலன் முறத்திட்டுக்

கொழித்துவெண் டுகிலிற் றலைமடிக் கொட்டிக்
குவித்ததோ ழியரோடும்
குருமணி முன்றிற் பரப்பிமெய் துவளக்
கோல்வளைக் குரலேங்கக்

கழித்தடங் கமலத் துணைக்கரஞ் சேப்பக்
கலைமதி முகம்வேர்ப்பக்
கண்ணிமைப் புறும லிழைத்தயாம் வருந்தக்
கடைவளை யலம்பாயும்

வழித்தலை மலர்த்தேன் சொரிமலைக் கிறைவன்
மணற்சிற்றில் சிதையேலே
மாலிருஞ் சோலை மலையலங் காரன்
மணற்சிற்றில் சிதையேலே. (அ)

வேறு

வரியுங் கடுங்கார் முகங்கண்டு
வளர்க்கும் பிணைக்கன் றகலுமது
மடற்பூந் துளபத் திருமேனி
மழைக்கார் காட்டக் குயிற்பிள்ளை

இரியும் வளவாய் நெடுந்திகிரி
எறிக்கும் வெயிலை முதுவேனில்
என்று கலாவ முள்ளொடுக்கி
இளைய மயிற்பே டெம்மைவிட்டுப்

பிரியுந் தவளத் தரளமணி
 பிறழு நிலவுப் பெருவெள்ளம்
பெருகு முன்றிற் றலைவந்து
 பெய்யும் பசும்பொ னொளிபரந்து

சொரியுங் கழற்காற் றுணைக்கமலம்
 துவளச் சிற்றில் சிதையேலே
சோலை மலைக்கு நான்மறைக்கும்
 தோன்றல் சிற்றில் சிதையேலே. (௯)

ஓடுங் கலுழி விடப்பாந்தள்
 உடலங் கிழியத் தூண்டுசக
டுச்சி மிதிப்பப் பேரரக்கன்
 உருவ மெடுத்த தெழுந்துபுகை

ஆடுந் தழன்மெய்க் கரிக்கட்டை
 அகல மிதிப்பக் குருகுலத்தில்
அரச ரிளங்கோ வானததர்
 அருங்கான் படர்கற் றலைமிதிப்பத்

தோடுஞ் சுரும்புந் ததும்புகுழற்
 றோகை யுருவ மெடுத்ததொளி
சொரியுந் தவளத் திருமுன்றிற்
 றுலவக்கின் முன்னை வடிவிழக்கும்

பாடு மறைநான் குடுத்தபதம்
 பதித்துச் சிற்றில் சிதையேலே
பார்த்தன் றேர்க்கும் புள்ளிற்கும்
 பாகன் சிற்றில் சிதையேலே. (௧௦)

முடங்காப் புரண்டு நிமிருரகன்
 முடியிற் கிடக்கும் புவியேழும்
முந்நீ ரேழும் வரையேழும்
 முழங்கு மருவிப் பெருக்கெடுப்பக்

கடங்காற் றியமா திரமெட்டும்
கனகக் குடுமிப் பொலன்வரையும்
ககன மேழு முட்கிடப்பக்
கமலத் திருத்தாள் பொத்தியநாள்

அடங்காப் புலியோ குற்றேவல்
அடியே மாரை யயர்முன்றில்
அளக்க விற்றைக் கடிவைப்ப
தலைநீ ருடலந் தழல்பரப்பத்

தடங்கார்ச் சிலையிற் பகழிதொடும்
தலைவன் சிற்றில் சிதையேலே
சங்கத் தழக னிடபகிரித்
தலைவன் சிற்றில் சிதையேலே. (கக)

சிற்றிற்பருவமுற்றும்.

ஒன்பதாவது

## சிறுபறைப்பருவம்.

மறுதலையரக்க ருயிரயில்குடிப்ப
வமரரையளித்த நெடுவேள்
மதனழியவெறறு சிறுவயிறலைத்து
மயில்வரைபறப்ப வனல்போய்
மறிதிரைவயிற்றின் முழுகிமுதுவெப்பு
முமிழுடல்குளிர்ப்ப வரிதா
வடதிசைபுரக்கு மகள்புறமளிப்ப
மழைதுளிமறுத்த வணமீ

தெறும்வலியிருப்பு நெடுநுதிமருப்பு
முதுகலைதெறிப்ப வடல்வாய்
எறிபடைபிடித்த கரம்விடவுடுத்த
புலியதளிலத்து விழவான்

இடிபடவாற்று தமருகம்வெடித்த
குரலவியநெட்டை யரவூர்
எரிவிழுதுவிட்ட சடைபிணிநெகிழ்ப்ப
மரகதம்விரித்த விலைசூழ்

அறுகிதழிகொக்கி னிறகுதிரவட்ட
மதியின்வகிர்பட்ட நுதன்மீ
தலையும்வெயர்நெற்றி விழியழலவிப்ப
வமரநதியெற்றி விழுநீர்
அறைதிரைகொழிப்ப வுடல்பொதிவெளுத்த
பொடிகழுவவொற்றை ரதமூர்
அருணவெயில்கக்கு பழையவொளிகொட்ப
வரன்முதுகளிப்ப முதனுள்

தெறுமுனைமுகத்தி லவுணனெழுவொத்த
திரள்புயமதுற்ற கறைநீர்
சிகரவரைவிட்ட வருவியையநிகர்ப்ப
வெறிதிகிரிவிட்ட மதிதோய்
திருமலைபுரக்கு மழகருணிலெற்று
சிறுபறைமுழக்கி யருளே
திருவரைவணக்கி யழகருணிலெற்று
சிறுபறைமுழக்கி யருளே. (க)

வேறு.

ஒளிபெருகித்துளும்பு பரமபதத்திறைவா
உகளமுதைச்சுரந்த வெளியகடற்றுறைவா

அளியுழுபற்பவுந்தி யெழுதரணிப்புரவா
அயனுமைமலைவத்தபங்கன் விபுதகுலக்குரவா

விளைநகையுட்டதும்பு திகிரிசெலுத்துழவா
விழுநகைகக்குபொங்க ரிடபமலைக்கிழவா

குளிரமலர்க்கைகொண்டு சிறுபறைகொட்டுகவே
குணிறலையெற்றிநின்று சிறுபறைகொட்டுகவே. (உ)

வேறு.

செக்கரி லொளிகெழு துப்பினை யெறிகடல்
செற்றிய தழலெனவே
திக்குள சுறவகை நெற்குலை சடைபடு
செய்த்தலை விழவருசேல்

மொக்கிய குருகெழ வுட்பொதி சினைசிறை
முத்திட வளைதவழா
முக்கெறி குரல்தனை விட்டுயிர் நிகர்பெடை
முற்பயில் வெளியெனவால்

எக்கரி னிலவிய வுச்சியி லிளமல
ரிற்புற மளவிருகால்
எட்டடி யிடவிழை பெட்டையி னொடுதிரை
யெற்றிய முதுபுனல்வாழ்

குக்குட மலமரு வெற்புறை மழைமுகில்
கொட்டுக சிறுபறையே
கொத்தளி நிரையுழு மைத்துள வணிமுகில்
கொட்டுக சிறுபறையே.

வேறு.

வெண்டிரைப் பாற்கடல் விடப்பாம் புடற்றும்பு
வெற்புமத்தெரிமுழக்கும்
விண்கிழிக் குங்குடமி நொச்சிசூழ் மிதிலைவாய்
வின்முடக் கியமுழக்கும்

புண்டிரைக் குருதிநீ ராறுபட வாடகன்
பொன்மார்பி லுகிரழுத்தப்
புடைக்கும் பெருந்தூண் பிளந்தெழுமுழக்கமும்
பொங்கர்மது வாய்மடுத்து

வண்டிரைத் திகழ்குதட் டுந்துணர்த் தருவூழ்த்த
மலர்கொணர்ந் தமரரறிய
வாய்வைத்த வெள்வளை முழக்கமும் கேட்டுளம்
வாழ்ந்தயா மின்றுமகிழத்

தெண்டிரைப் பரிபுர நதித்தலைவ குணிலெற்று
சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரிபுமுகில்
சிறுபறை முழக்கியருளே. (௪)

வேறு

புள்ளுநந் திரையும் பொருபுனல் குடையும்
பூந்தொடி மங்கையர்தேம்
பொதிவண் டலையுங் குமுதத்திளநகை
பொங்கொளி சொரிநிலவும்

கள்ளுண் சிறைவண் டினமும் பரவுங்
கற்றைக் குழல்செருகும்
கடிகமழ் பித்திகை விடுமலர் தூற்றுங்
கலைநில வும்மிடையைத்

தள்ளுங் கொங்கைத் தாளக் குவைசொரி
தண்ணில வும்பருகிச்
சற்றும் படுபசி தணியா திளைய
சகோரக் குலமுலவும்

தெள்ளும் புனனூ புரநதி யிறைவன்
சிறுபறை கொட்டுகவே
செம்பொற் சாரற் குலமலை யிறைவன்
சிறுபறை கொட்டுகவே. (௫)

வேறு

கரைகடந் திரைக்கு நீத்தநீர்க் குழியிற்
கால்விழ மருப்பேற்றும்
கழித்தலைக் குமுத வாயிதழ் மடுத்துங்
கட்செவி கிடவாமல்

விரைகமழ் துளவப் பொதும்பரி னீழல்
வெப்பறப் புயம்வைத்தும்
விடுமடற் கமல வுந்தியிற் பூத்தும்
விண்ணுட னெடுமெட்டு

வரையரா விருத்து நூற்றுவர் கூற்றின்
வாய்புகச் சுமைதீர்த்தும்
மலர்ப்பதந் தாவி யளந்துலகைக் கொண்டு
மற்றொரு பொதுநீங்கக்

குரைகடல் வளாக மெமதெனக் குரிசில்
கொட்டுக சிறுபறையே
குலமலை வாணன் மாலலங் காரன்
கொட்டுக சிறுபறையே. (சு)

ஆட்டியுந் தலைநீர் குழம்பவெற் புழல
வலைத்தகை குணிறுக்க
ஆர்க்கும்வெங் குரலை யெவரிவண் முழக்கு
மவரெனச் சிறுவர்க்குக்

காட்டியுமுடலந் துண்ணெனப் புரிந்து
கண்களைத் திசைவைத்தும்
கரத்தினுன் மீளப் புடைத்தெழுங் குரற்குக்
காந்தளஞ் செவிதாழ்த்தும்

நீட்டியுந் திரைத்து மெதுவென நகைத்து
நெஞ்சயர்ந் தலமந்தும்
நின்றுலாங் குரிசில் புறவினிற் பரப்பி
நிரையினைக் கழையூதிக்

கூட்டியும் யமுனைக் கரைவருங் களிறு
கொட்டுக சிறுபறையே
குலமலை வாணன் மாலலங் காரன்
கொட்டுக சிறுபறையே. (எ)

வேறு

விழுத்தலை வடித்தநெட் டுசிநட் டுங்குப்பை
வெந்தீப் பிழம்பிலிட்டும்
வெண்ணிணத் திந்தடி யரிந்துசெம் புண்ணின்வாய்
வெள்ளுப்பு நீரிறைத்தும்

சுழித்தலை பரந்தாடு முதிராநீத் தத்தினிற்
    றுயருழப் பத்தள்ளியும்
சுடர்வா ளிலைக்கள்ளி மீதெறிந் துங்காசி
    தூண்டுழைச் சுள்ளடங்கக்

குழித்தலை தலைக்கீ ழுறப்புதைத் தும்புலாற்
    குருதியுடல் போட்டுநாயின்
கோள்வாய்ப் புகுத்துமா தண்டமயர் மறலிபதி
    குறுகாம லடியருக்காத்

தெழித்தலை யறுவருவி மலைவந்து நின்றமுகில்
    சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணிகயிறு வரியுமுகில்
    சிறுபறை முழக்கியருளே. (௮)

பாந்தளிற் பஃறலைச் செம்மணிக் குப்பையிற்
    படர்வெயிற் குடல்வெதும்பிப்
பாண்சுரும் பறுகால் கிளைக்கும் பசுந்துழாய்ப்
    பள்ளியந் தாமநீழற்

சாந்தள றெடுத்துக் கொழிக்கும் பணைப்புயந்
    தவிசுநடு வீற்றிருக்கும்
தரைமகள் விரும்பியெக் காலமுந் நிலவெழுந்
    தவளவொண் சங்குடிக்கும்

காந்தளங் கையேந்து பாவையிப் பறையொலி
    கறங்கமெலி யசுணமல்லள்
கனிவாயின் மொழிகற்று வளர்கிளிப் பிள்ளைசூற்
    கருவிமுகில் கண்படுப்பத்

தேந்தழைப் பாயலரு ணற்சோலை மலைவாண
    சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணிகயிறு வரியுமுகில்
    சிறுபறை முழக்கியருளே. (௯)

துளிகொண்ட வெள்ளமிர்த மிடையறா தொழுகிவிளை
        துகிர்பழுத் தனையசெய்ய
தூயவா யூறலு முகத்தலை குழற்றலை
        துவற்றிவிழு புழுகுநெய்யும்
அளிகொண்ட தண்டுழாய்ப் பள்ளித் திருத்தொங்க
        லகவிதழ் வரிந்தோடுதேன்
அலையும் புனற்படத் தட்பமுற் றெழுகுரா
        லவிந்ததே னருகுபாயும்
ஒலிகொண்ட கடவுட் கவுத்துவச் செக்கர்மணி
        யுச்சியிற் கற்றைவெயில்வாய்
ஒளிபொங்க வென்றதள் வெதுப்புங் கருங்கொண்ட
        லுடுபதிக் குழவிதவழும்
தெளிகொண்ட தலையருவி துஞ்சுகுல மலைவாண
        சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரியுமுகில்
        சிறுபறை முழக்கியருளே. (௰)

சிறுபறைப்பருவ முற்றும்.

---

பத்தாவது

## சிறுதேர்ப்பருவம்.

இருகரமுஞ்செவப்ப வலனேடிளைத்துவிளைதேன்
        எழுதளவம்பதித்த கொடிவேரொதுக்கிமலரால்
மருவெழுபந்தரிட்டு வெயில்வான்மறைத்துமலிதூள்
        மடியமுகந்துகொட்டி யிறைநீர்மழைக்கண்மடவார்
நிறையளகங்குலைப்ப விழுதாதொதுக்கியடியேம்
        நிலவியமுன்றில்வட்ட நடுவேசிறுத்திமரைவாழ்
திருவுறைபொங்கர்வெற்ப சிறுதேருருட்டியருளே
        திகிரியிணைநதணைத்த சிறுதேருருட்டியருளே. (க)

பொறையுடலம்பிளப்ப வுழுசாறுவைத்தும் வருசேல்
பொருகதவந்திறக்கு மடைவாயடைத்துநுரைபாய்
அறைபுனல்பொங்கியெற்று நிறைகாலுடைத்தும்வயறோய்
அளறுபெறுங்குருத்து முளைநாறழித்துமணியால்
மறையவரம்புமுற்று முதுசூலுகுத்தும்வளையோர்
மளவருடன்பகைத்த புனலூடுடுத்தவளிசூழ்
சிறையெறிபொங்கர்வெற்ப சிறுதேருருட்டியருளே
திருவளரும்புயத்த சிறுதேருருட்டியருளே. (௨)

வேறு

புழுதி யளைந்து தெருத்தலையின்
புறம்போ யறையின் மணியசைத்தும்
புனிற்று வந்த தெனவுரைத்தும்
பொங்க லெனச்சே றடியிழுக்கும்
தொழுவி லுரலைப் பிணிப்பொழித்தும்
துள்ளுங் குழக்கன் றெருத்தணைத்தும்
தொடர்பாய்ந் தறுத்த தெனவுரைத்தும்
சொரியும் விழிநீர் மெய்போர்
அழுது பொருமி நின்றுபொய்யே
அடித்தா ரென்று மிலைமனையில்
அசோதை பதறி யோடிவர
அழைத்து நகைக்கு மழலைமுகில்
கொழுது மளிதோய் சோலைமலைக்
கோமான் சிறுதே ருருட்டுகவே
குளிறுஞ் சிலம்பா றுடையமறைக்
கோமான் சிறுதே ருருட்டுகவே. (௩)

மீன்கோட் டலைக்கும் பெருவாரி
வெள்ளத் தெழுந்த வெற்பும்வட
வெற்பு மழுந்த முன்னாளில்
வெள்ளை வராகப் பெரும்போத்தக

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-90

கூன்கோட் டிரட்டை நுதிமடுத்துக்
குழியில் வீழு நிலமகளைக்
கொண்டு நிமிர நாற்புறமும்
கொழிக்குந் தரங்கப் புனல்போல

வான்கோட் டிளைய மதியமுது
வழிக்கு மிரத நெடுஞ்சிகர
மருங்கு தொடுக்கு மிறால்பிளக்க
வழியுங் கடவா ரணங்குத்தித்

தேன்கோட் டிழிய வருஞ்சோலைச்
சிலம்பன் சிறுதே ருருட்டுகவே
தெள்ளுந் தரங்கப் பாலாழிச்
சேர்ப்பன் சிறுதே ருருட்டுகவே. (௪)

அண்ட ருவலைக் குடிற்படல்வாய்
அனைத்துந் திறந்து தோற்றவுறி
அலைந்து தோற்ற வுரன்மிதித்த
அடியின் சுவடு தோற்றமுதிர்

வண்ட லளைபா னிறைந்ததடா
வயிறு குறைந்து தோற்றவிடை
மகளிர் துவர்வா யலர்தோற்ற
வதனம் வெகுளி தோற்றவிளங்

துண்ட மதிவா ணுதற்பவளத்
துவர்வா யசோதை கைமாறு
தோற்ற வுடனே யருடோற்றத்
துணைக்கண் மைநீர் தோற்றவளை

உண்ட களவு தோற்றாமல்
உலக மேழு முண்டதிரு
உதரங் குழைய வழுதமுகில்
ஓட்டுஞ் சிறுதே ருருட்டுகவே. (௫)

வேறு

களிக்கக் குலப்பொதுவ ரெண்ணிலா யிரவராங்
கன்னியரி லொருவரைமலர்க்
கண்ணருள் புரிந்துமலர் மணிமுடியி லொருவரிரு
கால்வைத்து மொருவர்முலைதோள்

குளித்துக்களிப்பக் கலந்துமலர் கற்பகக்
கொடியொருவர் கொங்கைமுற்றக்
கோட்டியு முரக்களப வள்ளல்வா யொருவரிடு
குறியொருவர் காண்குறுமல்

ஒளித்துப் பெருந்துனி யொழித்துமய லொருவருட
னூடியும் பகலொன்றின்வாய்
உவலையக் குடிலடங் கத்திரியு மிளையமுகி
லொழுகுமொளி மணியரைத்துத்

தெளித்துக் குழைத்தனைய மழலைவா யழகனே
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே. (௬)

பூநறா வாறுபாய் சந்தனக் கொம்பர்ப்
புறத்துங் கடற்பிறந்து
பொன்பரப் புந்துணர்க் கற்பகக் கொம்பர்ப்
புறத்தும் வடந்துவக்கி

மீனறா வொழுகுமணி நூபுர நதிக்குவளை
விண்டபொற் றாதின்வெள்ளி
வெண்டிரைக் கங்கையின் பொற்றா மரைத்தாதின்
வேரியங் கால்கொழிப்பக்

கானறா வண்டுமுரல் கொந்தளக் குர[illegible]க்
கன்னியரும் வானநாட்டுக்
கன்னியரு மிருமருங் காட்டிடச் சதிரிளங்
கன்னியர்க ளூசலாடும்

தேனாறு விளையிரு ளுலாறு மலைவாண
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே. (எ)

அலையெடுத் திருகரை நெரித்துச் சுருக்கதற
வறைபுனல் வறண்டுநெட்டை
ஆழியிற் கானலந் தேர்புக விலங்கைக்கு
ளாதவன் றேர்கடாவக்

கொலையெடுக் கும்படை யரக்கருடல் வெய்யபுட்
குலமேற வுயிர்விமானக்
கொடிஞ்சிப் பொலந்தே ருகைப்பவா னவமாதர்
குங்குமச் சேதகத்து

மலையெடுக் கும்புளகம் விளையவா வெங்கணும்
மாறு விழாவெடுப்ப
மாரவே டென்றலந் தேரூர மாதலி
மணித்தேர் நடாத்திவெற்றிச்

சிலையெடுக் குங்கொண்டல் பரிமா தொடக்குபொற்
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே. (அ)

குருமணி பொதிந்தபொல னூரமுஞ் சுரும்பேறு
கொய்மலர்த் தாரலம்பும்
குவடுபடு மிருபது பணைத்தோளு மேழுடன்
கூறுகொண் டுரிமையாளும்

மருமணி மடற்கமல மங்கையும் மாவிர
மங்கையு மகன் றுமகலா
மண்மகளை யகல்விக்க வேண்டுமென வலிகொண்டு
மாறுகொண் டெதிர்சிலைத்துப்

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90